[illegible]

மலர் 7 இதழ்:

[illegible] 1984

JL
R673:11 N128
M.44.7.8.
187098

1187
Registered No. M. 2930.

" SIDDHANTHA
Vol. 7—No. 8.

OFFICE OF THE REGISTRAR OF ...
4 - SEP 1934

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் ௭ | பவ ஆண்டு ஆவணித் திங்கள்<br>1934 ௵ ஆகஸ்டு௴ | இதழ் ௮ |

உள்ளுறை — பக்கம்


பொய்யடிமையில்லாத புலவர் யார்? ... ... ௨௨௯
கல்வெட்டுகளிற் கண்ட சில சொல்வழக்காறு ... ௨௩௦
சைவம் ... ... ... ... ௨௩௨
சைவமும் தமிழும் ... ... ... ௨௩௯
திருஞானசம்பந்தர் பதிக அமைப்பு ... ... ௨௪௦
திருநீற்றின் சிறப்பு ... ... ... ௨௪௯
குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை ... ௨௫௯
திருவாசகம் உரையுடன் ... ௩௩௩-௩௪௮
சித்தாந்த சாத்திரம் உரையுடன் ... ௧௧௩-௧௨௮


ஆசிரியர் :—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.

உதவி ஆசிரியர் :—அ. கந்தசாமிப் பிள்ளை.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 2-0-0. 1934 தனிப் பிரதி அணா 4.

சிவமயம்

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!

# அப்பர் நாடகம்

இந்நாடகம் நான்கு அங்கங்களையும் பன்னிரண்டு காட்சிகளையும் உடையது. மாணவர் கழகங்களும் சைவசபைகளும் நடிப்பதற்கென்றே திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்களால் எழுதப்பெற்றது. இந்நாடகத்தைப் படித்தவுடன் பெரியபுராணத்தைப் படிக்கவேண்டும் என்ற ஆவல் இயல்பாகத் தோன்றும்.

**தனிப்பிரதி விலை அணா 2. தபாற்கூலி அணா 1.**
**பத்து பிரதிகள் விலை ரூ 1. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 8.**

உடனே சைவசித்தாந்த மகாசமாஜத்துக்கெழுதி பிரதிகளைப் பெறுக.

## மதிப்புரை

**அப்பர் நாடகம்.** ஆசிரியர் ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி. ஏ., பி. எல். விலை அணா 2. பக்கம் 52. கிடைக்குமிடம், சைவசித்தாந்த மகாசமாஜம் சென்னை. நன்மையோ தீமையோ விளைப்பதில் நாடகங்கட்குள்ள தனி வன்மை நாடறிந்ததொன்று. இந்நாளில் மிக்குப் பயிலும் நாடகங்களிலும் **சினிமாக்களிலும்** பல, மக்களைப் புலனின்ப நாட்டத்திற் புகுத்தி இழிநெறி செலுத்தும் இயல்பின; மிகச் சிலவே மேல்நெறிக்கு உயர்த்தும் மேன்மைய. நகர நாடகமேடைகளிற் காண்பது இவ்வாறிருப்பினும், பாடசாலைகளில் அவ்வப்போது நடிக்கப்படுவனவற்றால் தீமை பெருகுவதில்லை என்று செப்பலாம். ஆயினும் இவற்றால் மிக்க நன்மையே உண்டாக வேண்டுமானால், உண்மைப் பெரியார் சரிதங்கள் பல மாணவர் மனதைக் கவரவல்லநாடக வடிவில் எழுதப் பெறுதல் அவசியம். இத் தேவையை உணர்ந்த எனது நண்பர் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், திருநாவுக்கரசு சுவாமிகள் வரலாற்றைச் சிறப்புவகையில் மாணவர்க்கென நாடகமாய் அமைத்துத் தந்துள்ளார்கள். இவர்கள், பன்னிரு திருமுறைகளையும் பதினான்கு சாத்திரங்களையும் சிறந்த முறையில்,—ஆயினும் குறைந்த விலையில்—தொடர்பாய் வெளியிட்டுத் தமிழ் முதியோர்க்கு முன்னமே உபகரித்

Registered No. M. 2330.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4-SEP 1934
MADRAS

# சித்தாந்தம்

| மலர் ௭ | பவ ஆண்டு ஆவணித் திங்கள்<br>1934௵ ஆகஸ்டு௴ | இதழ் ௪ |
|---|---|---|

## பொய்யடிமையில்லாத புலவர் யார்?

[பத்திராசிரியர்]

பொய்யடிமையில்லாத புலவர் "பொய்ம்மையிலாத் தமிழ்ச் சங்கமதிற் கபிலர் பரணர் நக்கீரர்முதல் நாற்பத் தொன்பது பல்புலவோர்" என்று நம்பியண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியிற் கூறுகிறார். இதை யொட்டியே திருத்தொண்டர் புராணசாரத்திலும் "பொய்யறியாக் கபிலரொடு பரணராதிப் புலவோர்" என்று கூறப்பட்டுள்ளது. அந்தாதியிலும் புராண சாரத்திலும் ஒவ்வொரு பாட்டில் இவ்வளவு தெளிவாகக் கூறப்பட்ட இக்கூட்டத்தினரைச் சேக்கிழார் சுவாமிகள் மிகப் பொதுவாகக் கீழ்வரும் இரண்டு பாக்களாற் கூறுகிறார் :

"செய்யுள் நிகழ்சொல் தெளிவும் செவ்விய நூல்பல நோக்கும்
மெய்யுணர் வின்பயன் இதுவே" எனத்துணிந்து விளங்கியொளிர்
மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்

பொற்பமைந்த அரவாரும் புரிசடையார் தமையல்லால்
சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்ற
பெற்றியினில் மெய்ப்படிமை யுடையாராம் பெரும்புலவர்
மற்றவர்தம் பெருமையார் அறிந்துரைக்க வல்லார்கள்.

இப்பாக்களிலிருந்து பொய்யடிமையில்லாத புலவர் தனியடியாரா தொகையடியாரா என்பதுகூட முடிவு செய்தலாகாது. அவ்வளவு பொதுப்பட சேக்கிழார் கூறியதின் காரணம் தாம் நம்பிகள் கூற்றைத் தழுவ ஒருப்படாமையே. தழுவியிருப்பின் கபிலர் பரணர் நக்கீரர் பெயர்களைக் கூறியிருப்பர். சமணர்களும் சிற்றின்ப இலக்கியங்களும் சார்வு பெற்ற சங்கத்தைக் கூற சேக்கிழார் துணிந்திலர். சில ஆராய்ச்சியாளர் சேக்கிழார் பாக்களிலிருந்து பொய்யடிமையில்லாத புலவர் மாணிக்கவாசகர் என்று முடிபு கூறுகின்றனர். இம்முடிபுக்குப் போதிய ஆதாரம் சேக்கிழார் வாக்கில் இல்லையென்பது வெளிப்படை. சேக்கிழார் புராணத்திலும் திருத்தொண்டர் புராணசாரத்திலும் திருத்தொண்டர் திருநக்ஷத்திரக் கோவையிலும் பொய்யடிமையில்லாத புலவரைத் தொகையடியாராகவே கொள்ளப்பட்டிருத்தல் நோக்கத்தக்கது. வடமொழி பக்த விலாசங்கள் இரண்டிலும் இவரைத் தனியடியாராகக் கொண்டு இரண்டு வகையாக சரித்திரம் கூறப்படுகின்றது. ஸ்காந்த உப புராணத்திற் கூறப்படும் அகஸ்தியர் சிவபக்த விலாசத்தில் இவர் 'ஸத்யதாஸர்' என்று கூறப்படுகிறார். உபமன்யு பக்த விலாசத்தில் 'அஸத்யதாஸ்ய ரஹித கவி' எனப்படுகிறார்.

அகஸ்தியர் சிவபக்த விலாசத்திலுள்ள ஸத்ய தாஸர் சரிதம் கீழ்வருமாறு கூறப்படுகிறது :

சப்தப் பிரமமாகிற அமிர்தக் கடலில் சஞ்சரிக்கும் பிராணிகளுடைய மனசாகிற மத்ஸ்யத்துக்கு சதாசிவ



சரணத்யானமானது, எமனென்கிற வலையைக் கண்டிக்கிறது. வேதசாஸ்திரங்களை நன்றுணர்ந்தவர்களான வித்வான்கட்கு இருப்பிடமாயும் சரஸ்வதி இலக்குமி இருவர்களும் ஒன்று கூடி யிருக்கும் இடமாயும் வேதபுரம் என்று ஒரு நகரிருக்கிறது. அதில் பிராமணர்களுக்குள் முதன்மையான சத்ய தாசர் என்பவர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பரமசிவனது சரண கமலத்தில் பக்தியானது கூடப் பிறந்ததுபோல இருந்தது. வேதசாத்திரங்களின் கடலின் கரையைக் கண்டவராகிய அந்த சத்யதாசர் மூன்று சந்தியா காலங்களிலும் பரமசிவனைப் பூசித்துக் கொண்டும் மூன்று அக்ஷரங்களுள்ள மந்திரத்தால் சரஸ்வதி தேவியை ஆராதித்தும் வந்தார். இவ்விதம் பன்னிரண்டு வருஷகாலம் அவரால் பூசிக்கப்பட்டவளாயும் சரத்கால சந்திரன்போல் களங்கமற்ற உருவமுடையவளாயும் உள்ள சரஸ்வதி தேவியானவள் சொப்பனத்தில் தோன்றிப் பாலைக்கொடுத்து குடிக்கும்படி செய்தாள். அதனால் உடனே எழுந்திருந்தவராகிய அவருக்கு அமிர்த வர்ஷம் போலப் பெருகும்படியான சொற்பிரவாகம் பரமசிவன் சடையிலிருந்த கங்கைபோல் பெருகிற்று. அந்நிலையில் அவர் காலையில் எழுந்திருந்து சொப்பனத்தில் தனக்குக் கிடைத்த விஷயத்தைத் தனது குருவினிடம் தெரிவித்துத் தனக்குக் கிடைத்திருக்கும் வாக்பிரவாகத்தை எவ்விதம் பிரயோஜனம் செய்வதென்று வினவினார். மிகவும் சந்தோஷத்தை அடைந்தவராகிய அவரது குருவும் தமது பாதத்தில் நமஸ்கரித்த சீடராகிய சத்ய தாஸரைக் குறித்துச் சொன்னதாவது :

"சத்யதாசனே! தன்யனாயினாய். உனது இப்பிறப்பானது கடைசியாகவே ஆய்விட்டது நிச்சயம். பிரமஞானிகளான மகரிஷிகளால் நான்கு வேதங்கட்கும் முடிவுரையான தாத்பரி

யப்பொருள் சிவனேயென்று நிச்சயிக்கப்பட்டுள்ளது. ஆகையால் இவ்விதம் கிடைத்தவாக்பிரவாகத்தால் பரமேசுவரனைத் துதிக்கக் கடவாய். அம்மகேசுவரன் உனக்கு அநுக்கிரகம் செய்யக்கடவாராக." இவ்விதம் தனது குருவால் ஆஞ்ஞாபிக்கப்பட்ட புத்திமானை அந்த சத்யதாசர் தனது ஆயுள் முடிவுவரை பரமேசுவரனைத் தோத்திரம் செய்துகொண்டிருந்து சாயுச்சிய முத்திபெற்றார்.

உபமன்யு பக்த விலாசத்திலுள்ள அஸத்திய தாஸ்ய ரஹித கவி சரிதம் கீழ் வருமாறுள்ளது : கிருதார்த்தனையும் மனிதருக்குள் சிறந்தவனையு மிருக்கிற கூற்றுவநாயனாரை நமஸ்கரித்து மேலே சொல்லுகிறேன். அஸத்திய தாஸ்ய ரஹிதகவி என்ற மகா புத்திமான் ஒருவர் இருந்தார். அவர் தனக்கு புதிதாய்க் கிடைத்த தோத்திரம் செய்யும்படியான வாக்சாதுரியத்தைத் தனது சென்மத்துக்கு பிரயோஜனமாக நினைத்தார். அவர் பக்தியுடன் கூடிய சொற்களால் பரமேசுவரனை யல்லது வேறொரு மனிதனையும் தேவரையும் ஸ்தோத்திரம் செய்கிறதில்லையென்ற மனஉறுதி கொண்டவர். பரமசிவன் ஒருவரைத் தவிர வேறொருவரையும் துதிப்பதில்லையென்னும் காரணத்தாலேயே அவர் பொய்யடிமை யில்லாதவரென்றும் சத்யதாஸர் என்றும் பிரசித்தி பெற்றார். அவருடைய ஸ்தோத்திரப் பிரவாகத்தால் அலையடிக்கப்பட்ட மனதை யுடையவராகிய பரமேசுவரன் திடமான பக்தியையும் சாசுவதமான ஐசுவரியத்தையும் அவருக்குக் கொடுத்தருளினர். ரமணீயமான அக்ஷரங்களால் அலங்கரிக்கப்பட்டதும் உயர்ந்த லக்ஷணங்களை யுடையதுமான மிருந்த சோபையுள்ள அவருடைய கவித் திறமையானது அவருக்குப் பரமசிவனுகிற பதியினிடத்தில் பதிவிரதையாகவுள்ள புத்திரிபோல் (பல[illegible])[illegible]து. இவ்விதம் மதுர



மான சொற்களும் அர்த்தங்களும் அமையும்படியான சாமர்த்தியத்தை யடைந்தவாகிய சொற்களுடைய சமூகத்தால் பரமசிவனை எப்போதும் சந்தோஷிக்கச்செய்து அந்த கவியானவர் பரமசிவனது சரணத்தை யடைந்தார்.

இவ்விரண்டு பக்த விலாசங்களிலும் இப்புலவர் தனியடியாராகக் கொள்ளப்படுகிறார். தொகையடியாராயின் பன்மையில் கூறப்படவேண்டும். வடமொழியில் ஒருமையிலேயே இரு விலாசங்களும் இச்சரிதையைக் கூறுகின்றன. இச்சரிதை ஒன்றில் விவரமாகவும் மற்றொன்றில் பொதுவாகவும் கூறப்பட்டிருந்தபோதிலும் உபமன்யு பக்த விலாசத்தில் " புதிதாய்க் கிடைத்த தோத்திரம் செய்யும்படியான வாக்சாதுர்யம் " என்ற குறிப்பு அகஸ்திய பக்த விலாசத்தோடு ஒத்திருக்கிறது. மற்றவகையும் அஸத்தியதாஸ்ய ரஹித கவி (=பொய்யடிமை யில்லாத புலவர்) என்ற பெயரும் சேக்கிழார் கூறுவதின் மொழி பெயர்ப்பேபோல் தோன்றுகின்றன.

இவ்விரு பக்த விலாசங்களிலும் அறுபத்துமூன்று என்ற எண்ணிக்கை கொடுக்கப்பட்டிருப்பினும் கணக்கு விவரத்தில் மாறுபாடு காணப்படுகிறது. ஸத்ய தாஸர் தனியடியார் கணக்கில் வருகிறார். சடையனாரும் இசைஞானியாரும் வந்திலர். கோச்செங்கட் சோழர்க்குப் பதிலாகச் சிலந்தியும் யானையும் கூறப்படுகின்றன. திலகவதியாரும் சேர்க்கப்பட்டுள்ளாரோ என்ற ஐயம் பழைய பிரதி ஒன்றிலிருந்து எழுகின்றது. ஸத்ய தாஸர்க்குத் திருநக்ஷத்திரமும் கூறப்படுகிறது. ஆனால் அது ஆனி மகமல்ல ; வேறொன்று. மேற்கூறியவற்றிலிருந்து பொய்யடிமையில்லாத புலவர், தொகையடியார் என்ற முடிபுதான் பெருவழக்கி லிருப்பதும் பொதுவாகப் பொருந்தும் முடிபுமாகத் தோன்றுகிறது. தனி

யடியாராயிருப்பினும் மாணிக்கவாசகரா யிருத்தல் பலவகையி லும் பொருந்தாது. வடமொழி பக்த விலாசங்களிலிருந்து இவர் சரிதையை மொழிபெயர்க்கத் துணைபுரிந்த சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியாருக்கும் பிரம்மஸ்ரீ முடிக்கொண்டான் சுவாமிநாத சாஸ்திரியாருக்கும் எனது நன்றி பெரிதும் உரித்து.

# கல்வெட்டுகளிற் கண்ட சில சொல்வழக்காறு

[உதவிப் பத்திராசிரியர்]

## (1) பாத்தியன்

இச்சொல் அருகிய வழக்கில் உள்ளது. இதற்குப் பொருள் 'பாதத்திற்கு அன்பன்' என்பதாம். இதனை மணிமேகலையில் மந்திரங் கொடுத்த காதையின் "பகையறு பாத்தியன் பாதம் பணிந்தாங்கு" என்னும் (௬௫) அடிக்கு மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் எழுதியுள்ள உரையால் அறியலாம். இதற்கு மேற்கோளாக அவர்கள் காட்டியது திருச்சிற்றம்பலக்கோவையைப்பற்றி நம்பியாண்டார் நம்பிகள் கூறியருளிய பாடலில் உள்ளது: அது,

"வருவாசகத்தினின் முற்றுணர்ந்தோனை வண்டில்லை மன்னைத்
திருவாதவூர்ச் **சிவபாத்தியன்** செய்திருச் சிற்றம்பலப்
பொருளார்தரு திருக்கோவை கண்டேயு மற்றப் பொருளைத்
தெருளாத வுள்ளத்தவர் கவிபாடிச் சிரிப்பிப்பரே"

என்பதாம்.



இங்கு, சிவபாத்தியன்—சிவபிரானது பாதத்திற்கு அன்பன் என்னும் பொருளதாம். இத்தொடர் கல்வெட்டிலும் காணப்படுகிறது:—

வெஞ்சமாக்கூடலூர் என்பது கொங்கு நாட்டின் பாடல் பெற்ற தலங்கள் ஏழனுள் ஒன்றாக விளங்குவது; வன்றொண்டப் பெருந்தகையாரின் திருப்பதிகம் பெற்றுள்ளது; திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வந்து வணங்கி வண்டமிழ் மாலை சாத்தினாரென்னும் பெரியபுராண சரிதமும், பிற சரிதங்களும் உடையது. இவ்வூர்ச் சிவாலயத்தில் கடவுள் (விகிர்தேசுவரர்) ஆலயத்தினின்றும் அம்பிகை (பண்ணினன் மொழியம்மை) ஆலயத்திற்குப் போகவிடும் திருவாயிலில் நிலையில் ஒரு கல்வெட்டு:—

'ஸ்வஸ்தி ஸ்ரீ வில்லவன் மாதேவியில் இருக்கும் ஸ்ரீ மாகேஸ்வர சிவபாத்தியன் நமச்சிவாயத் தேவன் இத்திருநிலை செய்வித்தான்' என வுள்ளது. இங்கும் சிவபாத்தியன் என்பது அப்பொருளில் வழங்கினமை அறியப்படும்.

## (2) குடங்கொண்டு கோயில் புகுவான்

கோயில்களில் பூசை புரியும் அர்ச்சகரில் அற்றைமுறைக் காரருக்குக் குடங் கொண்டு கோயில் புகுவான் என்னும் பெயர் வழங்கினமை அறியப்படுகிறது. கோவை ஜில்லா பவாநிதாலூகாவில் வடமேற்கில் 12 மைல் தூர அளவில் அந்தியூர் என்ற ஓர் ஊருண்டு. அவ்வூர்ச் சிவாலயத்தில் (செல்வீசுவரர்) உள்ள கல்வெட்டொன்றில் இச்சொல் வழங்கப்படுகிறது. அக்கல்வெட்டு,

"..............கேசரிபன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ வீரபாண்டியதேவர்க்கு யாண்டு ௧௬-வது ஐற்ப....... வடகரை நாட்டு அந்தியூர் உடையார் செல்வீசுரமுடையார் நாயனார் காணியுடைய சிவப்பிராமணரில் காசிபகோத்திரத்

துப் பெரிய தேவன் பிள்ளையாலும்.......தேவன் நாயனை.... பத்தெ......ணுயிர்நம்.......................விஞ்ஞங்........களில்.... மண்.......காமிண்டன் பக்கல் நாங்கள் சந்திராதி உபயத்திற்குப் பற்றின பணம் பத்து. இப்பணம் பத்தும் கொண்டு சந்திராதித்யவரை இக்கோயிலிற் குடங் கொண்டு கோயில் புகுவான் ஒருத்தன் முட்டாமற் திருவிளக்கு எரித்துப்போதுவதாகக் கல்வெட்டிக் கொடுத்தோம். இப்படிக்குப் பிள்ளையானெழுத்து நாயனெழுத்து'' 'இது மாஹேசுவர ரக்ஷை' என்பது.

இதிலிருந்து கோயில் முறைகார அர்ச்சகருக்குக் ''குடங் கொண்டு கோயில் புகுவான்'' என்று வழங்கினமை அறியப்படுகின்றது.

# சைவம்

[அ. முத்தைய பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
திருச்செந்தூர் ஆலய மேற்பார்வையாளர்]

(மலர் - எ. இதழ் - எ. உஉ௪-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வொற்றுமையும் முற்கூறிய வேற்றுமையுமுடைய ஆன்மா, என்றும் அடிமைத்திறமையைப் பெற்றதென்பது சைவ சமயத்துணிபு. 'என் செயலாவது யாதொன் றுமில்லை' என்றும், 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்றும், 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம் நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம் ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம் இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்றும் இன்னும் இதே கருத்தோடெழுந்த கோடிக்கணக்கான அருமைத் திருவாக்குகளும் சிவஞானபோத முப்பொருளுண்மையை வலியுறுத்துவதோடு அடிமை யுணர்ச்சியால் எம்பிரானடியார்பாலுற்ற மனத்திட்பத்தையும் ஏமாப்பையும் தெளிவையும் களிப்பையும் உணர்த்துகின்றன.



ஆன்மாவைப் பிடித்துழற்றும் ஆணவப் படலங்கிழிய இதனினுமிக்கதோருணர்ச்சி வேண்டற்பாலதோ? இதுவன்றி, கடவுள், 'தானன்றி அயலில்லாத் தன்மைய' னென்றும், அவன் அங்ஙனமாதலின், அவனிடமிருந்தே அவனறிந்தோ அறியாமலோ தோன்றிய தென்பதல்லாது வேறு தோற்றக் காரணம் கூறத்தக்க இயல்பில்லாததும், யாது காரணம் பற்றித் தோன்றியதென்று உறுதிசெய்வதற் கிடமில்லாததும், 'தூயநல் லறிவன் றன்னைத் தோற்றமின்றாக்கி வைக்கும் வலிமை' எங்கிருந்து எவ்விதம் பெற்றதென்று முடிவு செய்யலாகா நிலைமையிலுள்ளதுமான, மாயா இருள்பெற்ற அஞ்ஞான மனத்தால் மயக்குண்ட அவன் அம்சங்களை ஜீவர்களென்றும், குறித்த அஞ்ஞான மயக்கம் விலகியகாலை தாம் கடவுளாயிருக்கும் உணர்ச்சி ஜீவர்களுக்குண்டாகிறதென்றும், அதுதான் முத்திப்பேறென்றும் கூறும்கூற்றின் வயப்பட்டார் ஆணவக்கட்டொழித்தல் எங்ஙனம்? நான் நான் எனும் அகந்தை யாகிய ஆணவம் அழிந்தநிலையிலேயே முத்திப்பேறு கிட்டுமென்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்ததாதலின், தான் கடவுளே என்று நினைத்து மயங்கி மாயா விருளை மாய்க்க முயல்வதிலும், 'இங்கு எனக்கென ஓர் செயலில்லை' எல்லாம் உன்பரமே உன்வசமே, உன்னருளன்றி யான் செய்யுமாறொன்றில்லை' என்று இரங்கித்தற்போதமற்று ஜீவச்செயல் நீங்கிச் சிவச்செயலிலேயே நிலைபெற்று நிற்றல், ஏற்றமுடையதோர் நெறியென்பது தெள்ளிதின் உணரக் கிடக்கின்றது.

இனி முத்திநிலையை ஆராயுமிடத்தும் தன்னைக் கடவுளென உணர்தலினும், தனக்கெனத்திவ்விய தேகம் பெற

வினும், போக போக்கியங்கள் இடைவிடா தனுபவித்த வினும், மீளா நரகத்திலும் சுவர்க்கத்திலுமாய் வாழ்வதிலும், நினைப்பற்று இல்லாப் பொருளாய்ச் சூனியமாதலினும், பதியோடு இரண்டறக் கலந்து, பதிவயப்பட்டு பதியினின்றும் பிரிப்பறியா நிலையிலொடுங்கினதாய் நிற்பது சால்புடையதோர் நிலையென்று சைவம் உணர்த்துவது நன்கு பாராட்டத் தக்கதோர் பொருளாம். இவ்விஷயம் சொல்லாலே சொல்லத்தக்கதல்ல வென்றும் அவ்விதம் துணிவது துரும்பு பற்றிக் கடல் கடக்கும் துணிபே என்றும் ஆன்றோர் கூறுவர்.

முத்திநிலை பேசுங்கால் அடியிற்கண்ட பாசுரம் ஆராயத்தக்கது. அது பதியைப் பசு இரந்து வேண்டுவதாகும்.

'காதலி னெமையருட் கைப்பிடித் தருளி
யொருவரு முணராப் பரம வீட்டி
லிருளறை திறந்த பெருவெளி மண்டபத்
துயர்நா தாந்தத் திருமல ரமளியிற்
புளகமெய் போர்ப்ப மொழிதடு மாற
உள்ளொலி நாதப் புள்ளொலி முழங்க
ஞானவா ரமுத பானம தருந்திக்
கருவிகள் கழன்று பரவச மாகிப்
பரமா னந்தப் பரவையுட் படிந்து
போரா வியற்கை பெற்றினி திருப்ப
ஆரா இன்ப மளித்தரு ளெமக்கே' —குமரகுருபரர்.

சகல சமயங்களும் ஒன்றுக்கொன்று சம்பந்த முடையன வென்றும் எச்சமயமும் மறுக்கற் பாலதல்லதென்றும் மாறுபடுங் கருத்துடைய தல்லதென்றும் எல்லாச் சமயங்களும் ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கேற்ப கருணைப்பெருங் கடலாய சதாசிவப்பொருளால் அளிக்கப்பட்ட தென்றும், காலமுறையானே எச்சமயிகளும் படிப்படியாய் மெய்நெறி



சேர்ந்து மெய்யுணர் வடைவார்களென்றும் விளங்கும்படி உளங்கனிந்து நம் குமர குருபரப் பெருந்தகையருளிய திருவாக்கு இங்கு தெளியற்பாற்று. அஃதாவது,

'பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண் டுய்கெனக்
குடிலை யென்னுந் தடவய லுப்ப
ணருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேத மென்னும் பாதபம் வளர்த்தனை
பாதப மதனிற் படுபயன் பலவே
அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே இலையொரீஇத்
தளிர்கொண்டு வந்தனர் பலரே தளிரொரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
யவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப
ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே'

# சைவமும் தமிழும்

[அ. மு. பரமசிவானந்தம்]

முதற் சங்கத்தே முழுமுதற் கடவுளரே முன்னின்று முத்தமிழ் வளர்த்தார் எனத் தெரிந்தாம். இனி இடைச் சங்கத்தே தமிழ் வளர்த்த விதத்தை உற்று நோக்குழி அஃதும் இச்சைவ சமயத்தினராலேயே போற்றி வளர்க்கப்பட்டது என்பது தெற்றெனத் தோன்றும்.

இடைச் சங்கத்தமர்ந்து நூலாய்ந்தார் பலராவர். அவருள் மிகச் சிறந்தவராகக் கருதப்பட்டவர் அகத்தியர் தொல்காப்பியர் முதலிய ஒன்பதின்மர். இவ்விடைச் சங்கம் இருந்தது கபாடபுரத்தே யாகும். இறையனார் அகப்பொருள் இவ்விடயத்தை விளக்கும்.

“இனி, இடைச் சங்க மிருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழியும் மோசியும் வெள்ளூர்க் காப்பியனும், சிறு பாண்டரங்கனும் திரையன் மாறனும் துவரைக் கோமானும் கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினார் என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசை நுணுக்கமும் பூத புராணமும் என இவை. அவர் மூவாயிரத்து எழுநூற்றி யாண்டு சங்க மிருந்தார் என்ப. அவரைச் சங்கமிரீயினார் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்ம ரென்ப. அவருட் கவியரங்கேறினார் ஐவர் பாண்டிய ரென்ப. அவர் சங்க மிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப. அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது.



இவ்விறையனார் அகப்பொருள் உரையைக் காணின் அவ்விடைச் சங்கத்தே இருந்தோரையும், சங்கத்திருந்த நூல்களையும் அறியலாகும். அந்நூல்களில் மிக முக்கியமானவை அகத்தியமும் தொல்காப்பியமுமே. அவற்றுள் அகத்திய மியற்றிய அருந்தமிழ்ப் பெரியாராம் அகத்தியரைப் பற்றி முன்பே ஆராய்ந்தறிந்தமையின் பின்னுள்ள தொல்காப்பியத்தைச் செய்த தொல்காப்பியரை ஆராய்தல் அவசியம்.

இத் தொல்காப்பியர் அகத்தியர் மாணவர் பன்னிருவரில் ஒருவராய் அமர்ந்து பல்கலைப் பயின்று பாரோர் படித்துய்யுமாறு தம்நூலைச் செய்தார். இவர் உருவப்படம் செந்தமிழ்ச் செல்வியில் வெளி வந்ததை நோக்குவோமாயின் இவர் சைவ ரெனக் கூறத் தடையென்ன! இவர் செய்த நூலின் உட்புகுந்து நோக்குவோமாயின் அங்கும் ஆண்டாண்டே சைவ மணங் கமழும்.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருடார்த்தங்கள் மிகவும் இச் சைவ சமயத்தே போற்றப்பட்டு வருகின்றன. சில சமயங்கள் மற்ற மூன்று வகையினையும் கூறுமேனும் வீட்டைப் பற்றியோ வீட்டின் நிமித்தத்தைப் பற்றியோ கூறா. அறம் பொருள் இன்பத்தையும் தொடர்ந்து கூறா. ஆனால் நம் சைவ சமயம் அறம் பொருள் இன்பம் மூன்றையும் கூறிப் பிறகு வீட்டையும் கூறுகின்றது. சில சைவ நூல்கள் அறம் பொருள் இன்பம்கூறி வீட்டின் நிமித்தத்தைப் பற்றிக் கூறுகின்றன. அஃதேபோல் நம் தொல்காப்பியரும் அறம் பொருள் இன்பம் மூன்றையும் கூறி வீட்டின் நிமித்தத்தைக் கூறுகின்றனர். இதை நச்சினார்க்கினியர் தம் பாயிர வுரையில் கூறுமாற்றால் அறியலாம். என்னை யெனில், கூறுதும்: ‘வீடு கூறாரோ யெனின், அகத்தியனாரும் தொல்

காப்பியனாரும் வீடு பேற்றிற்கு நிமித்தங் கூறுதலன்றி வீட்டின் தன்மை இலக்கணத்தாற் கூறுரென்றுணர்க. அஃது,

> ' அந்நிலை மருங்கினறை முதலாகிய
> மும்முதற் பொருட்கு முரியவென்ப ' (தொல். செய்யுள் 106)

என்பதனுல் உணர்க. இக்கருத்தானே வள்ளுவனாரும் முப்பாலாகக் கூறி மெய்யுணர்த்தலான் வீடு பேற்றிற்கு நிமித்தங் கூறினார்' என்றார். எனவே, இலக்கணம் கூறவந்த தொல்காப்பியர் நிமித்த முகத்தான் கூறுதலன்றி நேர்முகத்தான் கூறுரென்றுணர்தல் தெற்றெனத் தெரியும்.

தவிரவும் சுவர்க்கமும், மோட்சமும் நம் சைவ சமயக் கொள்கையே என்பன உலகறி விடயம். இச்சுவர்க்கத்தைப் பற்றியே ஆசிரியரும் கூறினுரெனின் அவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் எனக் கூறுதல் சாலச் சிறந்தது. பாயிர வுரையில் நச்சினார்க்கினியர் ' அரிறப ' என்னும் பதத்திற்கு விசேடப் பொருள் கூறுகையில் அகத்தியனாருக்கும் தொல்காப்பியனாருக்கும் குமரியைக் கொண்டு வரும் விடயமாக நேர்ந்த விதத்தைக் கூறி அகத்தியர் சபித்ததையுங் கூறினார். நச்சினார்க்கினியர் கூறுவதாவது அது குற்றமென்று அகத்தியனார் குமரியாரையும் தொல்காப்பியனாரையும் " சுவர்க்கம் புகாப்பீர் " எனச் சபித்தனர். 'யாங்கள் ஒருவரும் குற்றமும் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையின் எம்பெருமானும் சுவர்க்கம் புகாப்பீர்' என அவர் அகத்தியனாரைச் சபித்தார் எனக் கூறுகின்றார். எனவே, தொல்காப்பியரும் அகத்தியனாரும் சுவர்க்கப் பற்றுடையவரெனத் தெரிகின்றமையின் தொல்காப்பியர் சைவரே.

இன்னும் பனம்பாரனார் கூறிய பாயிரத்தே ' அறங்கரை நாவின் நான்மறை முற்றிய அதங் கோட்டாசன் ' எனக் கூறியதில் நான்மறை என்பதற்கு தைத்திரியம், பௌடிகம், தலவகாரம், சாம வேதம் ஆகிய நான்கு என நச்சினார்க்கினியர் பொருள் செய்கின்றனர். எனவே, அந்த நான்மறை அறிந்த பெரியோன் தெரிந்த தொல்காப்பியம் எனப் பொருள் படுகின்றது. அந்நான்மறையும் இறைவனும் மாதொருபாகனுல் இயற்றப்பட்டவை. எனவே சைவசமய ஆராச்சியுள்ளவர் தெரிந்த தொல்காப்பியமாகும். ஆதலால் சைவசமயத்தைச் சார்ந்தவர் தொல்காப்பியராவர். இன்னும் தொல்காப்பியர் தம் நூலின் நிலங்களுக்குத் தெய்வங்கள் கூறி வருகின்றார். அச்சூத்திரம் வருமாறு :

> ' மாயோன் மேய காடுறை உலகமும்
> சேயோன் மேய மைவரை உலகமும்
> வேந்தன் மேய தீம்புன லுலகமும்
> வருணன் மேய பெருமண லுலகமும்
> குறிஞ்சி முல்லை மருதம் நெய்தலெனச்
> சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே '

இவற்றுள், தமிழ் நூல் மிகவும் புகழத்தக்க களவு மணத்தில் மிக முக்கியமான களவு நிகழுமிடமாகிய குறிஞ்சிக்கு நம் முருகக் கடவுளைத் தெய்வமாகக் குறிப்பிட்டுள்ளது நோக்கத் தக்கது.

இனி அக்காலத்து உள்ள மற்றப் பெரும் புலவர்களை ஆராயின் அவர்களும் சைவ சம்பந்த முடையவர்களேயென அறியலாகும். வள்ளுவரைப் பற்றி ஆராய்வாம்: இவ்விடத்தே வள்ளுவரைப் பற்றிப் பலருக்குச் சந்தேகங்கள் நிகழலாம். அவர் இடைச் சங்க காலத்தவர் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள. அவைகளை விரிப்பிற பெருகும். அவைகளெல்லாம் திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் எழுதிய 'திருவள்ளுவர்' என்னும் நூலில் கண்டு கொள்க. திருவள்ளுவர் சைவரா என்பதை மட்டும் யாம் ஆராய்வாம் :

திருவள்ளுவர் நூலுள் புத்தர் ஜைனர் முதலியவரைக் கூறவில்லை. பரந்து கெடுதல் உலகியற்றியான் என்ற குறளிலிருந்து கடவுளால் உலகம் படைக்கப்பட்டது என்பதை கூறினர். சைனர் முதலியோர்களுக்கு அக்கொள்கை இல்லை என்பது தெளிவு.

‘வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது’

என்னும் இக்கொள்கையினுல் இவர் புத்தரல்லர் என்பது தெளிவு. செம்பொருள் காண்பதறிவு என்பதில் செம்பொருள் என்பது சைவற்கு உடம்பாடு.

எனவே மேற்கூறிய காரணத்தால் வள்ளுவர் சிலர் கூறுமாறு சைனர் அல்லது பௌத்தர் அல்லரென்பதும் சைவர் என்பதும் தெளிவு. இவ்வாறே இடைச் சங்கத்தே இருந்த புலவர்களெல்லோரும் சைவர் என உணரலாகும்.

# திருஞான சம்பந்தர் பதிக அமைப்பு

[ஈ. ந. தணிகாசல முதலியார் பி. எ. பி. எல்.]

## 8. திருஞான சம்பந்தர் பதிக முதற்பாக அம்சங்களின் தருக்க வொழுங்கு

புகலிவேந்தர் பதிகங்களில் சுத்த தத்துவஞான நோக்குடன் பாடிய பதிகங்கள் பலவென்பதும், அவற்றைத் திருக்கடைக்காப்பால் கண்டறிந்து வேறு பிரிக்கலாமென்பதும் கண்டோம். அவ்வாறு பிரித்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பதிகத்தின் முதல் ஏழு செய்யுட்கள், தாயுமானுர் பாடியவாறு :

“ஒன்றிரண்டாய் விவகரிக்கும் விவகாரங்
கடந்தேழாம் யோக பூமி
நின்றுதெளிந் தவர்பேசா மௌனநியாத்தைநிறை
நிறைவைத் தன்னை



அன்றியொரு பொருளிலதாய் எப்பொருட்குந்
தான்முதலா யசல மாகி
என்றுமுள்ள இன்பத்தைத் தண்ணென்ற
சாந்தபத இயற்கை தன்னை”

அற்புதமாய் விளங்குகின்றன. அவற்றின் ஒழுங்கு எவ்வாறு தருக்கத்திலும் காட்டக் கூடுமென்பதைக் கவனிப்போம்:

அத்துவித இன்பத்தைக் கண்டனுபவித்தற்கு ஏதுவான ஏழுயோக பூமிகள் முத்தியில் விருப்பம், நற்கேள்வி, சத்தில் மனநாட்டம், சத்துறப்பத்தி, சித்திவெறுப்பு, பரநாட்டமின்மை, விழியா நிலைஎன ஆன்றோர் வகுத்த சொற்றொடர்களே, ஒன்றன்பின்ஒன்றாய் ஞானயோக விருத்தியை விளக்குமாயினும், திருஞான சொரூபமான புகலிவேந்தர் பதிகத்தில் முதலேழு செய்யுட்களும் தருக்க ஒழுங்கு பெற்றனவாவென, யாதேனுமொரு பதிகத்தை எடுத்து ஆய்வோமாக. அவ்வாறு ஆய்வதன் முன்னர் தருக்க ஒழுங்கென்பது யாது என விளக்குவது, தற்கால மாணவர்க்கு மிகைபடக் கூறலாகாது.

மேல் நாட்டில் தருக்கம் இரண்டு பகுதியாய்க் கொடுத்தவற்றைக் கொண்டு முடிவு செய்யும் தருக்க மென்றும்,* கொடாதவற்றினின்று பிரத்தியட்சம் முதலிய சொந்த அநு

*Deductive logic. இத்தருக்கப் பகுதியில் மூன்றே பாகங்கள் உள. (Major Premises) பெரும் பிரதிஞ்ஞை, (Minor Premises) சிறு பிரதிஞ்ஞை, (Conclusion) முடிவு என்பன. (மனிதர்கள் கொடியவர் - Major Premises, இராமன் மனிதன் - Minor Premises, என்னும் இரண்டினின்று இராமன் கொடியவன் என்பது ஆங்கில தருக்கத்தில் ஒழுங்கேயாம். முன்னே மொழிந்த கூற்று மனிதர்கள் கொடியவர் என்பதற்கு ஆதாரவு யாதென்றும் இராமனை மனிதனென்று சொல்லலாமோ என்றும் கேட்க அங்கு இடந்தருவதில்லை கொடுத்தவற்றைக் கொண்டு முடிவதாம் என்பது அத்தருக்கமாம்.

பவத்தால் பொருள் நிச்சயம் செய்யும் தருக்க மென்றும் *இருவகையாய்ப் பகுக்கப்பட்டிருக்கின்றது. அவ்விரண்டு பகுதிகளும் களங்கமுள்ளனவே யென்றும், அவை ஒன்றிற்கொன்று துணையென்றும், அவற்றில் ஒன்று மற்றொன்றைப் பிரிந்து தனித்திருப்பின் பயனிலதாகுமென்றும் மேல்நாட்டு தத்துவ சாஸ்திரிகளே கூறுவர். நமது தருக்கமோ அவ்வாறன்று. சுருதி, யுக்தி, அநுபவமென்னும் முப்பகுதியையும் அடிப்படையாகப் பெற்ற வாதமாகும். ஆகையால் சம்பந்தர் பதிகத்தின் பதினொரு செய்யுட்களில் ஒரு பெரிய தருக்க வாதம்போல் நமது முறைப்படிப்பிரதிஞ்ஞை, ஏது, உதாகரணம், உபநயம், நிகமனம் என்னும் ஐவகை வாத அவயவங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் நிற்பது எளிதில் காணலாம். சாதாரணமாய் முதல் ஏழு செய்யுட்களில் பிரதிஞ்ஞை, ஏது, உதாகரணம், உபநயமென்னும் நான்கும் முறையே விரவியிருக்கவும், எட்டு, ஒன்பது, பத்தாவது செய்யுட்களில் நிகமனம் விரவியிருக்கும். ஏனெனில், ஏழுவகை ஞானபூமிகளின் முடிவாவது, ஆணவம், காமியம்,

*இத்தருக்கத்தில் சுருதியென்பதற்கே இடமில்லை. கைம்மண் அளவான தனதனுபவத்தையே உலகளவென்று துணிந்து தன் யுக்தி போனவழி முடிவுக்கு வருதல், இத்தருக்கத்தின் இலக்கணமாகும். ஆதலால் இத்தருக்கத்தின் சிந்தாந்தமாவது, உண்மை நிலையற்றதென்றும், மாறக்கூடியதென்றும், நேற்று உண்மையாயிருந்தது இன்று பொய்யாவது நியாயந்தானென்றும் சாதிப்பது. இதற்கு உதாரணம் - உலகத்தில் பலர் மரணமடைகின்றனர் என்பதை நாம் காண்கின்றோமாதலால், எல்லா மனிதரும் மரணமடைவரென்பது. சிரஞ்சீவிகள் உளரென்றும், அஷ்டமாசித்திகளால் சிலர் மரணத்தை வென்றிருக்கின்றன ரென்பதும் அவர் அறிவதில்லை. ஒருவேளை அறிந்து ஆமோதிக்க நேர்வாயின், "நேற்று உண்மை, இன்று பொய்" என்பது அவருக்குப் பொருத்தமான கொள்கையேயாம்.



மாயை என்பனவற்றின் வேரற்ற சச்சிதானந்த நிலையாதலால், அந்நிலையின் சத்திலக்கணத்தை 8-ம் செய்யுளிலும், சித்திலக்கணத்தை 9-ம் செய்யுளிலும், ஆநந்த விலக்கணத்தைப் பத்தாஞ் செய்யுளிலும் ஆளுடைய பிள்ளையார் திருப்பதிகம் விளக்கும்.

இத்தன்மையை நாம் கண்டறிவதில் பெரிய திருப்பதிகங்களில் சீர்களாலும் பல்வகைச் சொற்றொடர்களாலும் சற்று மறைவு நேரக்கூடுமாயினும், வஞ்சி விருத்தங்களாலாக்கப்பட்ட பதிகங்களில் யாவும் வெளிப்படையாய்த் திகழும். அவற்றில்* ஒன்றை எடுத்து ஆராய்வோமாக. அதாவது:

—புகலிவேந்தர்

திருவீழிமிழலையுள் வட்டமின்றி காசுபெற்ற திருப்பதிகம் அதாவது திருவீழிமிழலை - திருவிருக்குக் குறள் - பண்-குறிஞ்சி. இதன் முதலிரண்டு பாசுரங்கள்,

"வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே" (1)

"இறைவ ராயினீர், மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே" (2)

வட்டமின்றி காசுகொடுக்க வேண்டு மென்று பாடும் இப்பதிகத்திலும் முன் கூறிய தருக்க வொழுங்கு அமைந்திருக்கின்றது. ஞான பூமியின் முதல் பூமி முத்தியில் விருப்பமாதலால் அது ஏசலில்லா நிலையாகும். இரண்டாம் யோக பூமி நற்கேள்வியாகிய முறைமை காசின் ஓசை கேட்டே இது நல்ல காசு அல்லது செல்லாத காசு என்று நிர்ணயிக்க வேண்டுமாதலால், கேள்வியை இரட்டுற மொழிதல் போல் "கறைகொள் காசினை முறைமை நல்குமே" என்றனர் போலும். இவ்விரண்டு தொடர் மொழிகளும் பிரதிஞ்ஞை

*Vide pp. 146—152, of Sambandar's Devaram (in Samajam Edn.) when you have a number of specimens.

யாக *நாம் எடுத்துக் கொள்வோமாயின், 3-ம் செய்யுளும், 4-ம் செய்யுளும் ஏதுவாய் நிற்கக் காணலாம் :—

"செய்ய மேனியீர், மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர், உய்ய நல்குமே" (3)

" நீறு பூசினீர், ஏற தேறினீர்
கூறு மிழலையீர், பேறும் அருளுமே" (4)

"உய்ய நல்கல்", "பேறும் அருளல்" முறையே சத்தில் மனநாட்டமும், சத்துற் பத்தியுமாம். ஏசலற்ற முறைமை இது வென்பதற்கு உய்ய வருளும் பேறு ஏதுவாகுமன்றோ? (புகையுண்மையால் தீயுண்மை போய் இதன் உதாகரணம் பின் வரும் இரண்டு பாக்களிலும் அமைந்து நிற்கின்றது)

"காமன் வேவவோர், தூமங் கண்ணினீர்
நாம மிழலையீர், சேமம் நல்குமே" (5)

"பிணிகொள் சடையினீர், மணிகோள் மிடற்றினீர்
அணிகொள் மிழலையீர், பணிகொண் டருளுமே" (6)

காமனை வேவ வைத்தும் பிறகு அவனை எழுப்பிய காலத்தில் அவன் இரதி தேவிக்கு மாத்திரம் தோன்றவும் மற்றோர்கட்புலனுக்குத் தோன்றாமையும் ஆகிய தன்மை தந்த திருவருளும், ஆலால விஷத்தைத் தனது மிடற்றில் இருத்திய திருவருளும் எடுத்துக் காட்டும் ஏதுக்குத்தக்க உதாரணமன்றோ? இம் மூன்று அம்ஸங்களைக் கொண்டு அவற்றின் (Application) பிரயோகம் பரிட்சை செய்து காண்பதே 7-ம் பாசுரத்தில் விளக்கப்பட்டதாகும்.

"மங்கை பங்கினீர்! துங்க மிழலையீர்!
கங்கை முடியினீர்! சங்கை தவிர்மினே!" (7)

என்பதாகும். சமையற் சாலையில் புகை கண்ட ஒருவன், மலையில் கண்ட புகையால் நெருப்புண்டோ இன்றோ என்னும் சங்கை தவிர்த்தல் போல், வட்டமற்ற காசு நல்கல் சங்கை தவிர்த்தலாய் ஆளுடைய பிள்ளையார் குறிப்பிட்டது காண்க.

*பிரதிஞ்ஞை = Proposition (உ-ம்) இம்மலை தீயுடைத்து. உதாகரணம் = Example (உ-ம்) யாது புகை யுடைத்து அது தீயுடைத்து.



இந் நான்கு அம்ஸங்களைத் தாண்டும் போதே நிகமனம் அல்லது வாதத்தின் முடிவு தானாய் விளங்கும். அது ஆணவம், காமியம், மாயை என்னும் மூன்றையு மழித்த சத்து, சித்து, ஆநந்த நிலையாதலால் இங்கு 8, 9, 10 ஆகிய செய்யுட்களில் அவற்றைப் பொருந்தும் ஒருவகைத் துறையில் புகலி வேந்தர் காட்டுகின்றார். அதாவது அச்சத்தானது மிக்க இரக்கமுள்ள தென்றும், அச்சித்தானது அளவு கடந்த தென்றும், அவ்வாநந்தம் சோம்பலான சுகமன்று, பகையை வேரறக்களைந்த வீரன் பெற்ற ஆனந்த மென்றும் அது பிறிதின் தன்மையால் ஒப்பிடக் கூடாததென்றும் அவர் பாசுரங்களின் சொற்றொடர்கள் அமைந்திருப்பன காணலாம்.

" அரக்கன் செரிதர, இரக்க மெய்தினீர்
பாக்கும் மிழலையீர், காக்கை தவிர்மினே" (8)

"அயனு மாலுமாய், முயலு முடியினீர்
இயலும் மிழலையீர், பயனு மருளுமே" (6)

பறிகொள் தலையினர், அறிவ தறிகிலார்
வெறிகொள் மிழலையீர்! பிறிவ தரியதே. (10)

இத்தர்க்க வொழுங்கு இத்திருமுறையில் இதற்கு முன்னும் பின்னுமுள்ள இப்பண்பெற்ற வஞ்சி விருத்தங்களில் உள. முதல் ஏழு செய்யுட்களில் முறையே ஏழுவகை யோக பூமிகளைக் குறிக்கும் தொடர்மொழிகள் தந்து தர்க்க வாத அவயவங்களில் அவற்றில் முதல் நான்கையு மமைத்துப் பிறகு 8, 9, 10 - ல் நிகமனத்தை முன்னே கூறிய முறை

யில் ஆளுடைய பிள்ளையார் ஒரு துறையில் சொல்லாமலே சொல்லுகின்றனர்.

“ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே”

என்று கூறும் தமது கருத்திற்கேற்ப வெளிப்படையில் தர்க்கப் பகுதிகளைப் பிள்ளையார் அமைத்துக் காட்டாவிடினும், அவர் பதிகங்கள் எவ்வகையில் நோக்கினும் தருக்க வொழுங்கிலேயே காணப்படுகின்றது.

# திருநீற்றின் சிறப்பு

[S. A. அமிர்தகடேஸ்வர பிள்ளை]
வேளாங்கண்ணி.

(மலர் எ. இதழ் எ. உகக-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் அருட்பிரகாச வள்ளலார் ஸ்ரீலஸ்ரீ இராமலிங்க சுவாமிகளின் ‘நீற்றின் புண்ணியம், செவியறி வுறுத்தல்’ முதலிய அருட்பாக்களில் பரக்கக் காண்க.

இனி இத்தகைய விபூதிதனைத் திரிபுண்டரமாகத் தரித்தலைக் குறித்துச் சிறிதே சாற்றுதும். திரிபுண்டரம்:— இஃது ‘முக்குறித் தொகுதி’ எனவும் பொருட்படுவதியல்பு. இருவினையின்றன்மைகட் கீடான ஆக்கைபெற்ற ஆன்மாக்களின், ஆணவம், கன்மம், மாயை என்னு மும்மலங்களை அறவே நீக்கும் இயல்புடையதாகலின் அவ்வரிய நீற்றினை யாவரும் அவயவங்கடோறும் மும்மூன்று குறிகளாக நீரிற் குழைத்துத் தரித்துக் கொள்ளும்படி விதித்தருளினர். சரீர சுத்தி செய்துகொண்டு முழந்தாளளவான பரிசுத்த நீரில் நின்றேனும், அன்றி சுத்தமான தானத்திருந்தேனும் அவரவர்கள் அநுட்டிக்கும் மந்திரங்களை உச்சரித்து நீரில்



குழைத்து சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், இரண்டு முழந்தாட்கள், இணைப்புயங்கள், சோட்டு முழங்கைகள், இரு மணிக்கட்டுகள், உபயவிலாப்புறங்கள், முதுகு, கழுத்து ஆகிய பதினைறு இடங்களில், முறையே நெற்றியிலிரண்டு கடைப்புருவ நீளமும், மார்பிலும், புயங்களிலும் அவ்வாறங்குல நீளமும், ஏனைய தானங்களில் ஓவ்வோரங்குல நீளமாகவும், வளையாமலும் இடையறாமலும் ஒன்றை யொன்று நெருங்காதவாறு இடைவெளி ஒவ்வோரங்குல மிருக்கும்வண்ணந் தரித்தலுமாம்.

இதனை,

..........................
...............................
சென்னி நுதல் மார்பு முதியநாபி
யொத்திடு முழந்தாள் தோள்களுறு முழங்கை யிரண்டே
செப்புதற் கரிய முன்கை செவியொடு முதுகுகண்டம்
தப்பறச் சொல்லுமிந்த தானமீரெட்டுத் தன்னில்
துப்பு ரவுடைய நெற்றி மார்புதோளெனச் சொனுன்கு
மொப்பிலா நீள மாறங்குல மற்றதொவ் வொன்றாக

என வருவதானு முணர்க. முதலில் உத்தூளனம் தரித்த பின்னரே திரிபுண்டரந் தரித்தல்முறையாம். தீக்கையுடையவர் சந்தியாகால மூன்றிலும் நீர்குழைத்தும் மற்றைக் காலங்களில் சலங்குழையாமலுந் தரிக்கலாம். தீட்சையில்லாதவர் மத்தியானத்துக்குப் பின்னர் நீரிற் குழைக்காமலே தரித்தல் வேண்டும். முக்குறித் தொகுதி தரிப்பதில் விலாப்பக்கங்கள் இரண்டையும் நீக்கிக் காதுகளிரண்டையுங் கொள்வதும்; முழங்கைகளையும் மணிக்கட்டுகளையும் நீக்கிப் பன்னிருதானங்களிற் கொள்வது முண்டு. பிராமணர்கள், நெற்றி, புயங்களல்லாத மற்றத்தானங்களில் அவ்வாறங்குல நீளமாகவும், சத்திரியர் நன்னான் கங்குலமாகவும், வைசியர் இரண்டங்குல நீளமாகவும் தரித்தல் மரபு. நுதலில் திரிபுண்டரந் தரித்தலில், நடுவிரலாலும் சுட்டு விரலாலும் இடது பக்கத்திலிருந்து வலது பக்கத்துக்கும், மீண்டு பெருவிரலால் வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்திற்கு மூன்றுகுறியாம்படித் தரிப்பாரு முளர். இவண்

கூறிப்போந்த அங்குல முதலியன அளவுக்குக் குறைந்தேனும் அதிக மாயேனும் திரிபுண்டரந் தரித்தல் முற்றிலுங் குற்றமுடைத்தாம். திருநீற்றின் சிறப்பை ஆயிரம் நாப்படைத்த ஆதிசேடனாலும் இயம்புதற் கரிதெனில் எம்போலிகளால் புகலப்படுமேதோ ?

தீர்த்தத்திற் பெரியதோர் தீர்த்த மஃதில்லை
ஏத்தரிய செல்வமுளிதிலிதிற் பெரிய தில்லை
போத்துரையு மருந்தினுளிதிற் பெரிய தில்லை
நீத்தலுறு பண்டிதரு ணீற்றிற்கதிக ரில்லை.

எனவே தீர்த்தங்களுள்ளும், சிவசம்பந்தமான நீற்றிற் பெரிதான தீர்த்தங்களு மிலது. துதித்தற்கரிய செல்வங்களுள் திருநீற்றினும் பேறுடைத் தின்றாம். அனந்தம் ஔடதங்களுள்ளும் இதிற் சிறந்ததேது ? வாகடநூல் வல்லாரும் பசிதத்திற் கொப்பாவரோ ? இத்தகைய பூதிதனைத் தரிப்பது சிவத்துவப் பேற்றை அடைய எளிதாம். ஆகையால் திருநீற்றைத் தரிப்போர்க்கு யாதொரு குறையுமுண்டோ ?

உரைக் கைக்கு நல்ல திருவெழுத்துண்டு ரைப்படியே
செருக்கித் தரிக்கத் திருநீறுமுண்டு தெருக்குப்பையிற்
றரிக்கக் கரித்துணியாடை யுண்டு எந்தச் சந்நிதியிலும்
இரக்கத் துணிந்து கொண்டேன் குறையேது மெனக்கில்லையே.

என்பதனாலு முணரலாகும்.

இம்மட்டேயன்றி

நோயகலும் வந்தவினை நந்துவினை யெல்லாம்
போயகலும் வெண்பொடி புனைந்த வுடனேமுற்
பேயகலும் வஞ்சகப் பிறப்பினோ டிறப்பின்
தாயகலும் நன்மை கள்தழைத் தோங்கு மன்றே.

என்றலால், வெள்ளிய நீற்றினைத் தரித்தலும் சரீர சம்பந்தமான நோய்களும், இச்சனனத்தில் ஈட்டிய வினைகளும், இச்சனன மெடுத்தற் கேதுவாகிச் சென்ற முற்செனனத்தில் ஈட்டிய வினைகளும், பைசாசக் கோளும், பிறப்பின் தொல்லையும் தொலைந்து எவ்வித சுகத்தோடும் வாழ்வது திண்ணம்.

# குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை

[R. M. அண்ணாமலை செட்டியார்]

**மா**ணவன். சமயாசிரிய ரவர்களே ! இவ் வுலகத்திலே சமயங்கள் பலவாக இருக்கின்றனவே. அதற்குக் காரணமென்னை ?

குரு. அன்பனே ! இவ்வுலகத்திலே மக்கள் பலதிறப்பட்ட அறிவுடையவர்களாக இருக்கின்றார்கள் அன்றோ ! ஆதலால் சமயங்களும் பலவாக இருக்கின்றன.

மா. சமயங்கள் நமக்கென்ன போதிக்கின்றன ?

குரு. சமயங்கள் கடவுள், உயிர், ஆணவம், கன்மம், மாயை (சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை) ஆகிய பொருள்களின் உண்மைகளையும் இலக்கணங்களையும் விளக்குவதுடன் மக்கள் உய்வதற்குரிய வழிகளை நமக்குப் போதிக்கின்றன.

மா. அவ்வாறு விளக்கும் சமயங்கள் எத்தனை வகைப்படும் ?

குரு. புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச்சமயம் ஆகிய நால்வகைப் பகுதிகளுள் ஒவ்வொன்றும் அறுவகைப்படும்.

மா. புறப்புறச் சமயங்கள் ஆறு எவை ?

குரு. உலோகாயதம், நால்வகைப் பௌத்தம் (1 மாத்தியமிகம். 2 யோகாசாரம். 3 சௌத்திராந்திகம். 4 வைபாடிகம்) ஆருகதம் என்பன.

மா. புறச்சமயங்களாறு எவை ?

குரு. தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்பன.

மா. அகப்புறச் சமயங்களாறு எவை ?

குரு. பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்யவாத சைவம் என்பன.

மா. அகச் சமயங்களாறு எவை?

குரு. பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுவர வவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் என்பன.

மா. ஐயரே! பெறுதற்கரிய பிறவியாகிய இம்மானுடப் பிறவியைப் பெற்று வைத்தும் இத்துணைநாட்களும் குறிக்கோளிலாது கெட்டேன். தாங்கள் மேற்கூறிய சமயங்களுள் எந்தச் சமயத்தைப் பின்பற்றி நடந்தால் பேரின்பப் பெருவாழ்வைப் பெறுதல்கூடும்.

குரு. மேற்கூறிய சமயங்கள் ஒன்றுக்கொன்று மேம்பட்டனவாயினும், இறைவனோ டிரண்டறக் கலத்தலாகிய பேரின்பப் பெருவாழ்வை அவைகள் தரமாட்டா.

மா. அங்ஙனமாயின், எவ்வழி ஒழுகின் மேற்கூறிய பேரின்பப் பெருவாழ்வைப் பெறுதல் கூடும்?

குரு. மேற்கூறிய சமயக்கொள்கைகள் யாவற்றையும் தன்னுளடக்கிச் சமயாதீதமாக விளங்கும் சுத்தாத்துவித சைவசித்தாந்த நெறியைக் கைக்கொண்டு அவ்வழி ஒழுகினால்தான் பிறவிப் பிணி நீங்கி இறைவனோ டிரண்டறக் கலத்தலாகிய பேரின்பப் பெருவாழ்வைப் பெறுதல்கூடும்.

மா. தாங்கள் கூறுகிறபடி ஒப்புக்கொள்வதில் யாதொரு தடையுமில்லை. ஆனால் சைவசித்தாந்த முத்தி இலக்கணத்தையும் மற்றச் சமயங்களின் முத்தி இலங்கணங்களையும் சற்று விளக்கமாகக் கூறவேண்டுகிறேன்.

குரு. நல்லது கூறுவாம் கேட்பாயாக. சித்தாந்த சைவமல்லாத ஏனைச் சமயத்தார்க்கும் முத்திகள் உள. அம்முத்திகள்படிமுறையால் நிலம்முதல் நாதமீறாகிய முப்பத்தாறு தத்துவங்களில் ஒவ்வொன்றேயாகும். அவை வருமாறு:— உலகாயதநூலார் இம்மைக்கண்ணே பதினாறாண்டுள்ள அழகு பொருந்திய ஆபரணங்களணிந்த அரிவையரைக் கூடி இன்புறுதலே முத்தியென்பர். மீமாஞ்சை நூலார் யாகாதி கன்



மங்கள்செய்து மறுமைக் கண்ணே பெருமைமிக்க சுவர்க்காதிலோகபோக நுகர்தலே முத்தியென்பர். சவுத்திராந்திக நூலோர் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் ஆகிய ஐவகைக் கந்தங்களும் முற்றக் கெடுதலே முத்தியென்பர். ஆருகத நூலார் அநந்தஞானம், அநந்ததெரிசனம், அநந்தவீரியம், அநந்தசுகம், நிர்நாமம், நிர்க்கோத்திரம், நிராயுஸ்யம், சகல சம்யதாபாவம் ஆகிய எண்குணமடைதலே முத்தியென்பர். வைசேடிக நூலார் மெய்ம்மையாகப் பாடாணம் போற் கிடக்கையே முத்தியென்பர். சாங்கிய நூலார் தத்துவங்களைப் பகுத்துணரும் விவேக ஞானமே முத்தியென்பர். மாயாவாத நூலார் மாயை பிரமங்களை விசாரித்து மாயைக்கு வேறாகிய பிரமரூபமே யான் என வேதாந்த ஞானத்தால் அறிவதே முத்தியென்பர். சிவசமவாதிகள் முதலிய அகச்சமய நூலார் தன் உண்மை வடிவாகிய சிவசாரூப முதலிய பத முத்திகளைச் செவ்விதாகப் பெறுதலே முத்தியென்பர். ஆனால் சைவசித்தாந்த முத்தியாவது யாதெனில் முப்பத்தாறு தத்துவங்கட்கும் அப்பாற்பட்ட சிவபிரான் திருவடி என்று உபசரித்துக் கூறப்படும் சிவவியாபகத்தோடு இரண்டறக் கலந்து அவனது எண்குணங்களாகிய முற்றறிவு முதலிய எண்குண விளக்கங்களைப் பெறுதலே முத்தியாகும்.

மா. ஒரு குறிப்பிட்ட மரபினர்தான் சைவத்தைப் பின்பற்றலாமென்ற நியதியுண்டா?

குரு. இல்லை, இல்லை, இல்லை. சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்களனைவரும் எம்மரபினராயினும் அவர்கள் சைவ சமயத்தைப் பின் பற்றலாம்.

மா. தங்கள் கருத்துப்படி தெய்வப் புலமை திருவள்ளுவ நாயனாரும் ஒரு சைவர்தான் என்று தாங்கள் நிரூபிக்க முடியுமா?

குரு. முடியும்.

“ தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை

திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசக மென் றுணர்.''

என்று நமதம்மை ஒளவைப் பிராட்டியாரருளிய சான்று ஒன்றே போதாதா?

மா. நாயனார் தம் திருவாக்காலருளிய திருக்குறளிலிருந்து அகச்சான்று காட்ட வேண்டுகிறேன்.

குரு. உன் விருப்பப்படியே விரிவாக விளக்குவாம். கவனமாய்க் கேட்பாயாக: நமது நாயனார் கடவுள் வாழ்த்து கூறவந்த முதல் அதிகாரத்துள்ள முதல் பாட்டில் ''அகர முதல வெழுத்தெல்லா மாதிபகவன் முதற்றே யுலகு.'' என்றருளினாரல்லவா! ஈண்டு 'ஆதிபகவன்' என்ற சொல்லானது சிவபெருமானையே குறிக்கின்றது. அஃதெவ்வாறெனில் எல்லாவற்றையுஞ் சங்காரஞ் செய்யக்கூடிய கடவுள் எவரோ அவரே ஆதியாக இருக்க முடியுமென்பது தர்க்க நூல்வல்லார் முடிபாதலின் ஆதிபகவன் என்ற சொல்லானது சங்காரக் கடவுளாகிய சிவபெருமானையே குறிப்பதாயிற்று. அன்றியும் பகவன் என்பது ஆண்பால். பகவதி என்பது பெண்பால். எனவே, பகவதி என்னும் சொல்லானது காரண இடுகுறியாய்ச் சிவசத்தியையே குறிப்பதாகலின், ஈண்டு பகவன் என்னும் சொல்லானது சிவபெருமானையே குறிப்பதும் குறிப்பிடத் தக்கது. மேலும் சிவபெருமான் மாதொருபாகன் என்பது வெளிப்படை யாதலால் ஆதிசத்தியையுடைய பகவன் என்னும் பொருட்டு ஆதிபகவன் என்றார் எனினும் அமையும். இவையெலா மன்றி பகவன் என்ற சொல்லிற்கு உரை கூறப் புகுந்த நிகண்டாசிரியர் தாம் சமணராக இருந்தும் தங்கள் கடவுட் பெயரையும் முதலில் வையாது ''பகவனே, ஈசன், மாயோன், பங்கயன், சினனே, புத்தன்'' எனக் கூறியதில் பகவத் சப்தம் சிவபெருமானுக்கே சிறப்பாகவுரியதெனக் காட்டுதற் பொருட்டு பகவனே ஈசன் என்று முதலிற் கூறியது கொண்டும் அறிவாயாக. இன்னும் நமது சமயாசிரியர்களெல்லாம் ''எட்டுவான் குணத்தீச னெம்மானை,'' எனவும் ''இறையவனை மறையவனை எண் குணத்தினானை,'' எனவும் கூறியாங்கு தெய்வப் புலமை திருவள்ளுவ



நாயனாரும் ''கோளில் பொறியில் குணமிலவே எண்குணத் தான்றாளை வணங்காத்தலை,'' என்றருளிய திருக்குறளில் எண்குணத்தான் எனக் கடவுள் இலக்கணத்தை வெளிப்படையாகக் கூறியது கொண்டும் தேர்வாயாக. இனித் திருக்குறளுக்கு உரை கூறவந்த ஆசிரியராகிய பரிமேலழகர்கூடத் தாம் வைஷ்ணவராக இருந்தும் எண்குணத்தான் என்றவிடத்தில் இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது என்று உள்ளதை உள்ளவாறு ஒத்துக்கொண்டதும் நோக்கற்பாலது. இன்னும் நம் நாயனார் முத்திநிலை கூறும் இடங்களில் எல்லாம் இறைவன் அடிசேர்தலையே முத்தியாகக் கூறுகின்றார். இவ்வாறே ''சிவனடியைச் சேரும் முத்தி செப்புவதிங்கியாமே,'' எனச் சைவ சமயமே அடிசேர் முத்தியைக் கூறுவதாலும் இவ்வடிசேர் முத்தி சைவத்தைத் தவிரவேறெந்தச் சமயமும் கூறவில்லையாதலாலும் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் சைவ சித்தாந்தக் கொள்கையை உடையவரென்பதும் வெளிப்படை யாகும்.

இன்னும் கடவுள் வாழ்த்துக் கூறிய முதலதிகாரத்தில் வாலறிவன், இறைவன், மலர்மிசை யேகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், பொறிவாயி லைந்தவித்தான், தனக்குவமை யில்லாதான், அறவாழி யந்தணன் முதலான சொற்கள் பெய்யப்பட் டிருக்கின்றன. அவை யெல்லாம் எண்குணத்துள் அடங்குமாதலின் அஃதறிந்து தெளிவாயாக.

மா. தாங்க ளிதுகாறுங் கூறிய அகச்சான்று புறச்சான்றுகளால் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் ஒரு சைவ சித்தாந்திதான் என்பதைத் தெரிந்து கொண்டேன். ஆதலால் யான் சைவசமயத்தைப் பின்பற்றி நடக்கத் தயாராக இருக்கின்றேன். இனிச் சைவத்தைப் பற்றிப் பொதுவகையாகச் சில தெரிந்து கொள்ள விரும்புகின்றேன். அவற்றை இப்போது தெரிவித்தருள வேண்டுகிறேன்.

குரு. நிரம்பவும் சந்தோஷம்! தெரிய வேண்டுவதென்ன?

மா. நமது சைவ சமயாச்சாரியர்கள் யாவர்?

குரு. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய நால்வர்.

மா. நமது சைவ சித்தாந்த சந்தானாசாரியர்கள் யாவர்?

குரு. மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியர், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவசாரியர் ஆகிய நால்வர்.

மா. சைவ சமயப் பிரமாண நூல்கள் யாவை?

குரு. இறைவனருளிய வேத சிவாகமங்களும் சித்தாந்த சாத்திரம் பதினான்கும் பன்னிரு திருமுறைகளும், தமிழ் வேதமாகிய திருக்குறளும் இவற்றின் கருத்துக்கு மாறுபடாத மற்ற நூல்களும் பிரமாணமாகும்.

மா. சித்தாந்த சாத்திரம் பதினான் கெவை?

குரு. 1. சிவஞான போதம். 2. சிவஞான சித்தியார் 3. சிவப்பிரகாசம் 4. திருவுந்தியார் 5. திருக்களிற்றுப்படியார் 6. இருபா இருபஃது. 7. உண்மை விளக்கம் 8. திருவருட் பயன் 9. போற்றிப் பஃறொடை 10. கொடிக்கவி 11. வினாவெண்பா 12. உண்மைநெறி விளக்கம் 13. சங்கற்ப நிராகரணம் 14. நெஞ்சுவிடு தூது ஆகிய இந்நூல்களே யாகும்.

மா. பன்னிரு திருமுறைக ளெவை?

குரு. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் பாடிய தேவாரப் பதிகங்களை முதல் மூன்று திருமுறையாகவும், திருநாவுக்கரசு நாயனார் பாடிய தேவாரப் பதிகங்களை 4, 5, 6 திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய தேவாரப் பதிகங்களை 7-ஆம் திருமுறையாகவும், மாணிக்கவாசக சுவாமிகளருளிய திருவாசகம் திருக்கோவையார் என்னும் இரண்டையும் 8-ஆம் திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், நம்பிகாடவ நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதர், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்னும் நாயன்மார் ஒன்பதின்மர் அருளிச்செய்த திருவிசைப்பா பதிகங்க ளிருபத்தெட்டும் அவர்களுள்ளே சேந்தனாரருளிச் செய்த திருப்பல்லாண்டு பதிகம் ஒன்றுமாகிய இருபத்தொன்பது திருப்பதிகங்களையும் 9-ம் திருமுறையாகவும் திருமூலநாயனாருளிச்செய்த திருமந்திரத்தை 10-ஆம் திருமுறையாகவும், திருவாலவாயுடையார் திருமுகப்பாசுர முதலிய திவ்விய பிரபந்தங்களை 11-ஆம் திருமுறையாகவும், திருத்தொண்டர் பெரிய புராணத்தை 12-ஆம் திருமுறையாகவும் பெரியோர் வகுத்திருப்பதைக் கண்டு கொள்வாயாக.



மா. 11-ஆம் திருமுறைப் பிரபந்தங்கள் யாவை?

குரு. 1. திருவாலவாயுடையார் சேரமான் பெருமான் நாயனாருக்கு அருளிச்செய்த திருமுகப் பாசுரம்.

2. காரைக்காலம்மையா ரருளிய. க. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இரண்டு. உ. திருவிரட்டை மணிமாலை. ௩. அற்புதத் திருவந்தாதி.

3. ஐயடிகள் காடவர் கோனாயனார் அருளிய திருவெண்பா.

4. சேரமான்பெருமான் நாயனார் அருளிய க. பொன்வண்ணத் தந்தாதி. உ. திருவாரூர் மும்மணிக்கோவை. ௩. திருக்கைலாய ஞானவுலா.

5. நக்கீரதேவர் பாடிய க. கைலைபாதி காளத்திபாதி யந்தாதி. உ. திருவீங்கோய் மலை யெழுபது. ௩. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை. ௪. திருவெழு கூற்றிருக்கை. ௫. பெருந்தேவபாணி. ௬. கோபப் பிரசாதம். ௭. காரெட்டு. ௮. போற்றித் திருவகவல். ௯. திருமுருகாற்றுப்படை. ௧௦. திருக்கண்ணப்ப தேவர் திருமறம்.

6. கல்லாடனா ரருளிய திருக்கண்ணப்பதேவர் திருமறம்.

7. கபிலதேவரருளிய க. மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை. உ. சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை. ௩. சிவபெருமான் திருவந்தாதி.

8. பரணதேவர் பாடிய சிவபெருமான் திருவந்தாதி.

9. இளம்பெருமானடிக ளருளிய சிவபெருமான் திருமும்மணிக்கோவை.

10. அதிராவடிகளருளிய மூத்த பிள்ளையார் திருமும் மணிக்கோவை.

11. பட்டினத்துப்பிள்ளையார் பாடிய க. கோவில் நான் மணி மாலை. உ. திருக்கழுமல மும்மணிக்கோவை. ௩. திரு விடைமருதூர் மும்மணிக்கோவை. ௪. திருவேகம்பமுடை யார் திருவந்தாதி. ௫. திருவொற்றியூர்த் தொகை.

12. நம்பியாண்டார்நம்பி நவின்ற க. திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் திருவிரட்டை மணிமாலை. உ. கோயிற் பண்ணியர் விருத்தம். ௩. திருத்தொண்டர் திருவந்தாதி. ௪. ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி. ௫. ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம். ௬. ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை. எ. ஆளுடைய பிள்ளை யார் திரு உலாமாலை. அ. ஆளுடைய பிள்ளையார் திருக்கலம் பகம், ௯. ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை. ௧௦. திரு நாவுக்கரசு தேவர் திருவேகாதச மாலை. ஆகமொத்தப் பிர பந்தங்கள் நாற்பதும், பதினோராந் திருமுறை யென்றறிவா யாக.

மா. குருநாதரே. தாங்களிதுகாறுங் கூறியவாற் ருல் இவ்வுலகத்திலே மக்கள் பல திறப்பட்ட அறிவுடை யவர்களாக இருக்கின்ருர் களாதலாலே சமயங்களும் பல வாக இருக்கின்றன வென்றும், சமயங்க ளெல்லாவற்றை யும், அங்கமாகக் கொண்டு, சமயாதீதமாக விளங்குவது சைவ சமயமே யென்றும், தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனுரும், இச்சைவ சித்தாந்தக் கொள்கையையே கைக் கொண்டவ ரென்றும், அதனாலே அவரருளிய திருக்குறளை யும் உலகம் ஏற்றுக்கொள்கிற தென்றும் நமது சமய சந்தான ஆச்சாரியர்கள் இவர்களென்றும் நமக்குப் பிர மாணமான நூல்கள் இவையென்றும் விளக்கமாகத் தெரிந்து கொண்டேன். இதனுல் இவ்வுண்மைகளை யெல்லாம் தெள் ளத் தெளிய அடியேனுக்குப் போதித்த தங்கள் திருவடி கட்குப் பன்முறை வணக்கஞ் செய்து நன்றி செலுத்து கின்றேன்.



**குறிப்பு:**—வாழ்நாளை வீணுக்காது உய்யுங்கள் என்ற குறிப்புங் காண்க. பண்டாரம்=பொக்கிஷம்; நிதிக் களஞ்சியம். மூல பண் டாரமென்பது பேரின்பச் செல்வம். பாண்டி நாட்டிலே தமக்கு அருளினமையின் 'பாண்டிப் பிரான்' என்ருர். ௫

ஈண்டிய மாயா இருள்கெட எப்பொரு ளும்விளங்கத்
தூண்டிய சோதியை மீனவ னுஞ்சொல்ல வல்லன் அல்லன்
வேண்டிய போதே விலக்கில் ஐவாய்தல் விரும்புமின் தாள்
பாண்டிய னார்அருள் செய்கின்ற முத்திப் பரிசிதுவே.

**உரை:**—நெருங்கிய மாயாமலமாகிய இருள் நீங்கவும், எல்லாப் பொருளும் விளங்கவும், குதிரையைச் செலுத்தி வந்த ஒளியான வனைப் பாண்டியனும் இன்னுனென்று சொல்ல இயலாதவனே. ஐந்து வாயில்களாகிய ஐம்பொறிகளை விரும்பிய பொழுதே விலக்க வேண்டுமாயின், அவனது தாள்களை விரும்புவீர்களாக. பாண்டியனு ராகிய சிவபிரான் அன்பர்க்கு நல்கியருள்கின்ற வீடாகிய பரிசில் அவனது திருவடியாகிய இதுவே.

**குறிப்பு:**—மாயாவிருள் என்பது மாயா மலத்தாலுண்டாகிய திரிபுணர்ச்சி. நில்லாதன வற்றை நிலையின வென்றுணரும் அறிவு. தூண்டிய=செலுத்திய; குதிரையை என்பது தொக்கு நின்றது. எப்பொருளும் விளங்க உயிரினறிவை இயக்கிய என்றும் பொருள் கொள்ளலாம். ஐவாய்தல்=ஐவாசல்; ஐம்பொறி. விலக்கில்=விலக் கின். 'தாள் விரும்புமின்' எனமாறுக. பாண்டியனுரென்பது சிவ பிரானுக்கு வழங்குதல் அடிகள் மரபு. அறியப்படாது வந்து விரை வில் அருள் புரிதலையே 'முத்திப்பரிசு' என்ருர். ௬

மாயவ னப்பரி மேல்கொண்டு மற்றவர் கைக்கொள லும்
போயறும் இப்பிறப் பென்னும் பகைகள் புகுந்தவருக்
காய அரும்பெருஞ் சீருடைத் தன்னரு ளேஅருளுஞ்
சேய நெடுங்கொடைத் தென்னவன் சேவடி சேர்மின்களே.

**உரை:**—பாண்டியன் மாயமாகிய அழகிய பரிமேல் வந்து, பிறரைத் தன் வசப்படுத்துதலும், இப்பிறப்புக்குக் காரணமாகிய அறுபகைகள் கழிந்தொழியும். தன்பாற் சேர்ந்தவர்க்கு, (வீட்டிற்

குச் சாதனம்) ஆகிய அரியபெரிய சிறப்புடைய தனது திருவருளையே நல்குவன்; செம்மையாகிய பெரிய கொடை வள்ளலாகிய பாண்டியனாகிய சிவபிரானது செய்ய பாதங்களையே சேருங்கள்.

**குறிப்பு:**—தென்னவன் பரிமேல் கொண்டு மற்றவர் கைக்கொளலும் என முடிக்க. சேய்மையாகிய பெருங் கொடையெனப் பொருள் கொண்டு, அது முத்திப் பெருங் கொடை யென்றலுமொன்று. பிறப்பென்னும்=பிறப்பிற்குக் காரணமாய. பகைகள்= மும்மலங்கள், அல்லது காமக்குரோத லோபமோகமதமாற்சரியமாய அறுபகைகள். பகைகள் போயறுமென முடிக்க. ௭

அழிவின்றி நின்றதொர் ஆனந்த வெள்ளத் திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக் கடிய வினையகற்றிப்
பழமலம் பற்றறுத் தாண்டவன் பாண்டிப் பெரும்பதமே
முழுதுலகுந்தரு வான்கொடை யேசென்று முந்துமினே.

**உரை:**—அழிவில்லாமல் நிலை பெற்ற ஒப்பற்ற பேரானந்த வெள்ளத்தின் கண் அழுந்துவித்து நீக்கமில்லாத அருளைக் காண்பித்துக் கடுமையாகிய இருவினைகளை யொழித்துப் பழமையாக வரும் ஆணவ மலப்பற்றைத் தொலைத்து ஆட்கொண்டவன், பாண்டியனாகும் பெரும் பதவி மாத்திரமன்றி உலக முழுதுந் தரவல்லன். அவனது முத்திக் கொடையையே முற்பட்டுப் போய்ப் பெறுங்கள்.

**குறிப்பு:**—பாண்டிப் பெரும்பதமேயோ, அன்றி உலக முழுதும், எனக்கொள்க. பாண்டியனாகிய அவனது பெருமை வாய்ந்த திருவடியே சென்று அவனது கொடையே முந்துமின், என முடிப்பது முண்டு. பதம்=பதவி; திருவடி. ௮

விரவிய தீவினை மேலைப் பிறப்புமுந் நீர்கடக்கப்
பரவிய அன்பரை என்புருக் கும்பரம் பாண்டியனார்
புரவியின் மேல்வரப் புந்திகொ ளப்பட்ட பூங்கொடியார்
மரவியன் மேல்கொண்டு தம்மையுந் தாம்அறி யார்மறந்தே.

**உரை:**—உயிரிற் கலந்துள்ள தீய வினைகள் காரணமாக வருகின்ற முற்பிறப்புக்களாகிய கடலைக் கடக்கும்படி தன்னை வழிபட்ட அன்பரது எலும்பையும் உருகுவிக்கும் மேலான பாண்டியனார்



குதிரை மேல் வந்தபோது அவரால் அறிவு கவரப்பெற்ற அழகிய கொடி போன்ற மங்கையர், மரத்தினியல்பைப் பெற்றுத் தம்மையு மறந்து தாம் தம்மை அறியாராயினர்.

**குறிப்பு:**—முந்நீர்—ஆற்றுநீர், ஊற்று நீர், மழை நீர். என்ற மூன்றுங் கலந்தது. நிலம் உண்டாவதற்கு முற்பட்ட என்ற பொருளில், முன்னீரென்று பாடங் கோடலு முண்டு. பூங்கொடியார் மெய்யன்பர்க்கு உருவகம். மரம் இயல்=மரத்தின் தன்மை. புந்தி =அறிவு. தன்னுணர்ச்சி கெட்டு இறை யன்பு வயமாயினர் என்பது கருத்து. ௯

கூற்றைவென் றாங்கைவர் கோக்களை யும்வென் றிருந்தழகால்
வீற்றிருந் தான்பெருந் தேவியுந் தானும்ஓர் மீனவன்பால்
ஏற்றுவந் தாருயி ருண்ட திறலொற்றைச் சேவகனே
தேற்றமி லாதவர் சேவடி சிக்கெனச் சேர்மின்களே.

**உரை:**—யமனை வென்று, அவ்வாறே ஐம்புல அரசர்களையும் தோல்வியடைவித்துத் தானும் தனது பெரிய சத்தியும், (அன்பர்க்கருளுதற்பொருட்டு) அழகாக எழுந்தருளி யிருந்தானாகிய பெருமான், ஒரு பாண்டியன் பால் இரந்து வந்து, அவனது உயிரினைத் தன்பால் அடக்கிக்கொண்ட வீரமுடைய ஓர் ஆண்மகனாயினன். தெளிவில்லாதவர்களே! அவன் செய்ய பாதங்களையே உறுதியாகச் சேர்ந்து பற்றுமின்கள்.

**குறிப்பு:**—ஐவர்=ஐம்புலன். கோ=அரசன். மீனவன்=மீன் கொடியுடையவன். பாண்டியற்குக் கொடி, கயற் கொடி. உயிர் உண்ட=உயிர்ப் போதத்தைக் கவர்ந்து கொண்ட, சேவகனே என்பதில், ஏகாரத்தை அசையாய்த் தள்ளி அதனைச் சேவடி யென்பதோடு முடிக்கலாம். வீற்றிருந்தான் சேவகன் சேவடி சேர் மின்களே எனமுடிக்க. ௧௦

திருச்சிற்றம்பலம்

திருத்தோணிபுரத்தில் அருளிய

# பிடித்த பத்து

முத்திக் கலப்புரைத்தல்

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**உரை** :—விண்ணவர்களுக்கு மன்னனே, எங்கும் நீக்கமில்லாது வியாபித்த அத்துவிதக் கலப்புடைய பொருளே, மன அழுக்குடையேனாகிய எனக்குப் புதுமை என்று சொல்லும்படி அருள் கனிந்து வந்து என் குடும்ப முழுவதையும் ஆட்கொண்ட, இவ்வுலக வாழ்வு நீங்குபடி (பேரின்பத்தில்) வாழச்செய்த அமுதமே, செவ்விய நூற் பொருளின் முடிவே, சிறப்புடைய திருவடிகளை யுடையவனே, (நிலைத்த) செல்வமாயிருப்பவனே, சிவபெருமானே யாங்களுய்யும் பொருட்டு உன்னை உறுதியாகப் பற்றினேன். நீ இனிமேல் எங்கே என்னைவிட்டு எழுந்தருளிச் செல்வது?

**குறிப்பு** :—யோகமே = கலப்பே. உயர்வு என்ற பொருளுமுண்டு. குடி என்பதற்குக் குலமென்ற பொருளுமுண்டு. வாழ்வற = பிறவியற. கழல் ஆகுபெயர். எம்பொருட்டென்றது தானுந் தன்



னைச் சேர்ந்தாரையு முளப்படுத்தி - ஞானி ஒருவனுடைய தவத்தினால் அவன் குடிமுழுதும் உய்யுமென்பது நூற் கருத்து. க

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணம் காத்தெனை ஆண்ட
கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**உரை** :—(திருமால் காளையாகத் தாங்க விரும்பிய காலை) காளையை நீக்காது வாகனமாக விரும்பிக்கொண்ட வானவர் தலைவனே, தீவினையேனை (அடிமையாக) உடைய மெய்ப்பொருளே, புலால் நாற்றம் நீங்காத, முழுவதும் புழுவினாலாகிய கூட்டிற் கிடந்து முதிர் வெய்திப் பாழாகி, அடியேன் கீழ்மைப்படா வண்ணம் என்னைத் தடுத்தாட்கொண்ட தெய்வமே. அருட்பெருங் கடலே, இடையறாமல் உன்னை உறுதியாகப் பற்றினேன். நீ, என்னைவிட்டு எங்கே எழுந்தருளிச் செல்வது?

**குறிப்பு** :—விடாது = நீக்காது. திருமால் விடையானபடியினால் அதனை வாகனமாகக் கொண்டவரென்று திருச்சாழலிற் குறித்த கருத்தை நோக்குக. முடைவிடாத அடியேன் என்றது முடைவிடாதடியேன் என்றாயிற்று. முடைவிடாத என்பதைக் குரம்பை என்பதோடு முடிக்க. குரம்பை = கூடு. அதாவது இவ்வுடம்பு. முடைவிடாது என்பதை வினை யெச்சமாகக் கொண்டு மூத்து என்பதோடு முடித்தலுமுண்டு. அறமண்ணாய் = முற்றிலும் பாழாய். புலால் நாற்றம் நீங்கப்பெறாது அடியேன் கிடந்து மூத்துக் கடைபடா வண்ண மென முடிக்க. உ

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்

செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**உரை :**—தாயே, தந்தையே, நிகரற்ற மாணிக்கமே, அன்பாகிய கடலில் விளைந்த கிடைத்தற்கரிய அமுதமே, நிலையாதவற்றின்கண்ணேயே அறிவினைப்பெருகச்செய்து, நேரத்தைப்பயன்படாது கழிக்கின்ற புழுப்பற்றி யலைகின்ற கீழ்மைக் குண முடையேனாகிய எனக்கு, பெருநன்மைக் கேதுவாகிய சிவ மாந்தன்மை கொடுத்தருளிய நிலைத்த செல்வமானவனே, சிவபெருமானே, இப்பிறவியிலேயே உன்னை உறுதியாகப் பிடித்தேன்; நீ என்னைவிட்டு இனி எங்கெழுந் தருளிச் செல்வது?

**குறிப்பு :**—பொய்மை = பயனற்றவை; நிலையாதவை. பயனற்றவைகளை மிகுதிப்படுத்திப் பயன்படுஞ் செயலுக்குரிய நேரத்தைக் குறைப்பது இங்கே குறிக்கப்பட்டது. புழுத்தலை = புழுத்து அலைதல். உடம்பு புழுமயமாய் இருத்தலால் உடம்பொடு திரிதலைப் புழுத்தலைதல் என்றார். புழுத்தலை என்று கொண்டால் புழுப்பற்றிய தலையை உடைய என்பது பொருளாகும். செம்மை = நன்மை; நேர்மை. பதம் = நிலை. ௫

அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**உரை :**—கருணை நயமுடைய விளக்கே, கனிந்த நிலையிலுள்ள ஒப்பற்ற பழம்போல்வானே, பேராற்றலுடையசெயற்கரிய தவத்தைச் செய்தவர்களுக் கரசே, மெய்ப்பொருள் விளக்கும் நூலானவனே,



புகழ்தலைக் கடந்த சிவானுபவமானவனே, யோகத்தின் விளக்கமான பயனானவனே, தெளி வெய்திய இடத்து அடியாருள்ளத்தில் தங்கிய செல்வமானவனே, சிவபெருமானே, அறியாமை நிறைந்த இடமாகிய இவ்வுலகத்தின் கண்ணே உன்னை உறுதியாகப் பற்றினேன். இனி நீ எங்கெழுந்து செல்வது?

**குறிப்பு :**—படிப்படியாகப் பக்குவப்படாது எப்போதும் ஒரே தன்மையான இன்ப நிலையிலிருப்பதால் அளிந்ததோர் கனியே என்றார். தவர் என்பது சரியையாளரையும், அருந்தவரென்பது, கிரியையாளரையும், திறலருந்தவரென்பது யோகிகளையும், பெருந் திறலருந்தவரென்பது ஞானிகளையுங் குறிக்குமென்பர். வீடடைதற்குரிய மெய்க்கலை ஞானத்தை இறைவன் ஆசிரிய பரம்பரையில் வைத்து நல்கினமையால் பொருளுடைக்கலையே என்றார். சிவானுபவம் சொல்லினாற் கூறப்படாமையின், புகழ்ச்சியைக்கடந்த போகமே என்றார். சிந்தை தெளிந்த இடத்திலேதான் இறைவன் விளங்குதலின், தெருளிடத் தென்றார். இருளிடத்தே என்பதை வினைத்தொகையாகக் கொண்டு, உய்திக்கு வழி தெரியாது திகைக்கின்ற இடத்து எனப் பொருள் கொள்வாருமுளர். ௬

ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்ததோ ரன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**உரை.**—தனக்கு யாரும் நிகரில்லாத ஒருவனா யுள்ளவனே அடியேனது மனத்தில் உள்ளீடாக விளங்குகின்ற அறிவொளியே உண்மை நிலையறியமாட்டாத சிறப்பில்லாத வெனக்கு உயர்ந்த நிலையைக் கொடுத்த ஒப்பற்ற அன்பு வடிவமானவனே புனைந்துரைக்க முடியாத வளம் பொருந்திய ஒளி வடிவானவனே, நிலைத்த செல்வமே, சிவபெருமானே, யான் இளைத்த இடத்தே உன்னை உறுதி

யாகப் பற்றினேன். இனி என்னைவிட்டு நீ எங்கெழுந்தருளிச் செல்வது ?

**குறிப்பு :**—வீறு=சிறப்பு. மூர்த்தி = வடிவுடையவன். வீட்டினை நாடிப் பிறவித் துயரால் இளைத்த இடமே சத்திநிபாத நிலையாகும். ௫

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்
டளவிலா ஆனந்தம் அருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியஎம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெரு மானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**உரை :**—திக்கற்றவனாகிய என்னுடைய உள்ளத்தையே கோயிலாகக்கொண்டு எழுந்தருளியாட்கொண்டு எல்லையற்றபேரின்பத்தைக் கொடுத்து என் பிறப்பின் மூலத்தைக் களைந்து, என் குடும்பம் முழுவதையும் ஆட்கொண்ட, தலைக்கோல முடையவனே, எமது பெரிய பொருளே, தெளிவாக யான்கண்ட காட்சியானவனே, அடியேனுடை நிலைத்த செல்வமே, சிவபெருமானே, முடிவிலே உன்னையே உறுதியாகப் பற்றினேன். இனி நீ எங்கெழுந்தருளிச் செல்வது?

**குறிப்பு :**—அறவை = எல்லாமற்றவன்; யாதொரு கதியுமில்லாதவன். பிஞ்ஞகம்=இறைவனது சடைமுடி, பிறை, அவனது தலைக் கோலமாகும். திறவு=திறத்தல், வெளிப்படை. தெளிவு. இறவு=முடிவு; இறுதி. இறுதி யென்பதற்கு அபாயம் எனவுங் கொள்க. ௬

பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே



தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெரு மானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**உரை :**—மும்மலமாகிய கட்டுக்களின் மூலத்தைக் களையும் பழம் பொருளானவனே, அன்பு செய்யும் வகையை அடியேனுக் கருள் செய்து, எனது வழிபாட்டை விருப்புடன் ஏற்று, எனதுள்ளத்துட் புகுந்து அழகிய திருவடிகளைக் காட்டிய மெய்ப்பொருளே, இயற்கை ஒளியுடைய விளக்கே, வளமிக்க கதிர்வீசும் ஒளிவடிவானவனே, நிலைத்த செல்வமே, சிவபெருமானே, ஆண்டவனே உன்னை உறுதியாகப் பற்றினேன். இனி நீ எங்கெழுந்தருளிச் செல்வது.

**குறிப்பு:**—பழம் பொருள் என்பதற்குப் பழைய உபாயம் என்றலுமுண்டு. அதாவது ஞானத்தைப்பற்றி நிற்றல். தேசுடை விளக்கே என்றது இறைவனது தனி நிலையையுஞ் செழுஞ்சுடர் மூர்த்தி என்பது அவனது பலஅருள் வடிவங்களையுங் குறிக்கும். ௭

அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே யாதும் ஈறில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**உரை :**—அப்பனே, விண்ணவர்க்கு ஓராதாரமாய் நின்ற முதல்வனே, சற்று முடிவில்லாத திருவிளையாட்டுடையவனே, அல்லது ஞானவடிவனே, அன்பர்கள் உறுதியாகப்பற்றிய நிலைத்த செல்வமே, சிவபெருமானே, அன்பர் பால் விருப்புடையவனே, எல்லா வுயிர்களோடு கலந்து அவையேயாய், அவை உண்டாகி, நிலை பெற்று, நிற்பதற்குக் காரணமாய் தான் அவையல்லாமல் வேறு பொருளாய்,

187098

நிற்குந் தந்திரக்காரனே, உன்னை உறுதியாய்ப் பற்றினேன். இனி என்னைவிட்டு, எங்கே எழுந்தருளிச் செல்வது?

**குறிப்பு :**—அண்டமாய் = ஆதாரமான உலகமாய் என்பர். யாதும் = ஒரு சிறிதும். பித்தன் = விருப்பமுடையவன். தழைத்து, பிழைத்து என்பவை, தழைப்பித்து பிழைப்பித்து என்ற பொருளில் வந்தன. ௮

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**உரை:**—பாலினைக் குழந்தைக்குப் பசிக்குங் காலத்தே அது அழு முன்னே அறிந்து ஊட்டுகின்ற தாயைப் பார்க்கிலும் மிகவுமிரங்கித் தீவினையேனுடைய உடம்பை உருகுவித்து உள்ளத்தே அறிவொளியை வளர்த்து வற்றுதலில்லாத பேரின்பமாகிய தேனைப் பொழிந்து இடந்தொறும் உடன் திரிந்த செல்வமே! சிவபெருமானே! உன்னை யான் இடைவிடாது உறுதியாகப்பற்றினேன். இனி என்னை விட்டு நீ எங்கெழுந்தருளிச் செல்வது?

**குறிப்பு:**—மறப்பு நினைப்புடைய தாயினும், மறப்பு நினைப்பில்லாது எப்போதும் உதவும் கடவுளது கருணை பெரிதாதலின், சாலப் பரிந்து என்றார். ஊனினை உருக்கி என்பதற்குப் பிறவியை ஒழித்து என்று முரைப்பர். புறம் = இடம். சென்ற இடமெல்லாம் உடன் நின்றுதவுதலின், 'புறம், புறந்திரிந்த' என்றார்.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே.



துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**உரை:**—தசையாலாகியஎன் சிற்றுடம்பு மயிர்க்கால்கள்தோறும் நெகிழ்ச்சியடையுமாறு அதனைப் பொன்னினாலாகிய பெரிய கோவிலாகக் கருதி அதன்கண் எழுந்தருளி, என் எலும்பை எல்லாமுருகுவித்து எனக்கு எளிதில் வெளிப்படுபவனாகி என்னை யாட்கொண்ட ஆண்டவனே! குற்றமில்லாத மாணிக்கமே! பிறப்பு, இறப்பு, வாழ்வின் துன்பங்கள், அறியாமை என்னுமிவற்றின் சார்புகள் எல்லாவற்றையு மொழித்த நல்ல ஒளிவடிவனே! பேரின்பமானவனே! உன்னை உறுதியாகப்பற்றினேன். இனி நீ எங்கெழுந்தருளிச் செல்வது?

**குறிப்பு:**—யாக்கை என்பதைக் கோயிலா என்பதனோடு முடிக்க. துன்பமே என்பதில் ஏகாரம் எண்ணுப் பொருளில் வந்தது. ௧௦

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# திருவேசறவு

## சுட்டறிவு ஒழித்தல்

### கோச்சகக் கலிப்பா

*திருச்சிற்றம்பலம்*

இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கிக்
கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினைஉன் கழலிணைகள்
ஒருங்குதிரை உலவுசடை உடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவா றன்றேஉன் பேரருளே.

**உரைநடை:**—இரண்டாமடியில் கழலிணைகள் கரும்புதருசுவை காட்டினையென மாறுக. மூன்றாமடியை முதலிற் கொள்க.

**உரை:**—கங்கையில் அடங்கிய அலைகள் உலவுகின்ற சடையினையுடையவனே! இரும்பின் தன்மையைப் பயக்கும் உள்ளமுடையேனை இழுத்து இழுத்து எலும்பினை உருகுவித்து, நினது திருவடிகள் இரண்டின், கரும்பின் சுவைபோன்ற இனிமையை எனக்குக் காண்பித்தருளினை. நரிகள் எல்லாவற்றையும் பெரிய குதிரைகளாக்கிய வகை உனது பேரருளினாலாயதன்றோ.

**குறிப்பு:**—இரும்பு=இரும்பின் தன்மை. எளிதில் உருகாமை கங்கை சடையில் அடங்கினமையால், 'ஒருங்குதிரை' என்றார். ஒருங்கு=அடங்கு. அன்றே என்பதைப் 'பேரருள்' என்பதனோடு சேர்த்துப் பேரருளல்லவா, என்று கொள்க. அன்றே, என்பதை ஆக்கியவாறு என்பதனோடியைத்து, அந்நாளில் ஆக்கியவாறு என்று முரைப்பர். ௧

பண்ணார்ந்த மொழிமங்கை பங்காநின் ஆளானார்க்(கு)
உண்ணார்ந்த ஆரமுதே உடையானே அடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட் டாள்வாய்நீ வாஎன்னக்
கண்ணார உய்ந்தவா றன்றேஉன் கழல்கண்டே.



**உரை:**—பண் நிறைந்த சொல்லுடைய உமையம்மை பாகனே! உன் அடிமையானவர்கட்கு நுகர்வதற்குரிய நிறைந்த கிடைத்தற்கரிய அமுதமானவனே! முதல்வனே! மண்ணுலகிற் பொருந்திய என் பிறவிகளைத் தொலைத்து அடியேனை ஆண்டருள்பவனே! நீ என்னை வாவென்று சொல்ல, உன் திருவடிகளைக் கண்ணாரக்கண்டல்லவா நான் உய்ந்த முறை ஏற்பட்டது!

**குறிப்பு:**—உண்ணார்ந்த=உண்+ஆர்ந்த, நுகரும்படி நிறைந்த, கண்ணார என்பதை உன் கழல்கண்டேனை என்பதனோடு முடிக்க. அன்றே=அன்றோ. உன் திருவடியைக் கண்டுதானே நான் உய்ந்தேன். நீ ஆண்டகாலத்திற்போலவே, இன்று முதல் திருவடியைக் காட்டவேண்டுமென்று குறிப்பித்தவாறு. ௨

ஆதமிலி யான்பிறப் பிறப்பென்னும் அருநரகில்
ஆர்தமரும் இன்றியே அழுந்துவேற் காவாவென்
றோத(ம்)மலி நஞ்சுண்ட உடையானே அடியேற்குன்
பாதமலர் காட்டியவா றன்றேஎம் பரம்பரனே.

**உரைநடை :**—எம்பரம்பரனே என்பதை முதலிற் கொள்க.

**உரை:**—எமது மிக்க பெரியோனே! ஆதரவில்லாதேனாய்ப் பிறவி, சாவு என்கின்ற கடத்தற் கரிய நரகத்திலே உறவினர் யாதும் உதவுதற் கில்லாமலே அழுந்து மியல்புடையேனாகிய அடியேனுக்கு, ஐயோ வென்றிரங்கியருளி, கடலிற் சீறியெழுந்தவிட முண்ட நாதனே! உன் திருவடிக் கமலங்களைக் காட்டிய விதம் என்ன?

**குறிப்பு:**— ஆதம்=ஆதரவு. அழுந்து வேற்கு அடியேற்கு என்பதனோடு முடிக்க. ஓதம்=கடல். மலி=மிக்கெழுதல். அன்றே. அசை. ௩

பச்சைத்தாள் அரவாட்டீ படர்சடையாய் பாதமலர்
உச்சத்தார் பெருமானே அடியேனை உய்யக்கொண்

டெச்சத்தார் சிறுதெய்வம் எத்தாதே அச்சோஎன்
சித்தத்தா றுய்ந்தவா றன்றேஉன் திறம்நினைந்தே.

**உரை:**—பசிய நாவினையுடைய பாம்பினை ஆட்டுபவனே! விரிந்த சடையை யுடையானே! உனது திருவடித் தாமரையைத் தலையுச்சியிலுடைய பேரன்பரது தலைவனே! குறைவுகள் நிறைந்த சிறு தெய்வங்களை வழிபடாமல், உனது தன்மையையே நினைந்து, அந்தோ என் நினைவின் முறைப்படியே அடியேனை நீ உய்யக்கொள்ள, நான் உய்திகூடிய முறைதான் என்னே?

**குறிப்பு :**—தாள்=தால்=தாலு=(வடமொழி) நாக்கு. தாள் என்பதை ஆட்டீ என்பதோ டியைத்து இளந் திருவடியுடைய பாம்பாட்டீ என்பது முண்டு. இறைவன் பாம்பினைக் கச்சாகவுடையவன். திருப்புறம்பயத்தில் பாம்பாட்டுவானுக விடந்தீர்த்த கதை முற் கூறப்பட்டது. உய்யக் கொண்டு=உய்யக்கொள்ள. எச்சத்தார்= எச்சத்து+ஆர்=எச்சம்=குறை. ஆர்=நிறைந்த. சித்தத்தாறு=சித்தத்து+ஆறு=நினைவின் முறை. அது இறைவ னொருவனையே நினைதலாகிய முறை. ௪

கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்
துற்றிருமாந் திருந்தேன்எம் பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே.

**உரை :**—ஞான நூல்களைப் படித்தறியேன் ; உள்ளங் கனிந்துருகமாட்டேன். ஆயினும், உன்னையன்றி வேறு தெய்வம் எதனையும் அறியமாட்டேன். உனது திருவாக்கினியல்பினால், உனதுநீண்ட கழல்களைச் சேர்ந்து இறுமாப்புற்றேன். எம்பெருமானே ! நினது மாறில்லாத பொன்போன்ற அருள் அடியேனுக்கு நல்கியது பொன் இருக்கையை நாய்க்கிட்ட முறைபோலா மன்றோ ?

**குறிப்பு:**—வாக்கு=இறைவன் உபதேசமொழி. எம்பெருமானே என்பதை முதலிற் கொள்க. ௫

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் நின்னருளால்



உய்ஞ்சேன்எம் பெருமானே உடையானே அடியேனை
அஞ்சேலென் றாண்டவா றன்றேஅம் பலத்தமுதே.

**உரைநடை :**— எம்பெருமானே, உடையானே, அம்பலத் தமுதே என்பவற்றை முதலிற் கொள்க.

**உரை :**—எமது பெரியோனே! நாதனே! சிற்சபையிலாடும் அருமருந்தே! பஞ்சின் தன்மையையுடைய பாதங்களையுடைய மாதரது கடைக்கண் பார்வையால், இடைஞ்சற்பட்டு, நஞ்சுபோன்ற துன்பம் மிகுதலினால், (அஞ்சி) நடுங்கு மியல்பினனாகிய நான், உனது இனிய அருளாற் பிழைத்தேன். அடியேனை நீ அஞ்சாதே யென்று ஆட்கொண்ட வகைதான் என்னே?

**குறிப்பு :**—பஞ்சாய என்பதற்குச் 'செம்பஞ்சூட்டிய' என்றுரைப்பர். கூர=மிக. நஞ்சாய=நஞ்சுத்தன்மை யுள்ள. ௬

என்பாலைப் பிறப்பறுத்திங் கிமையவர்க்கும் அரியவொண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந் துறையுறையுஞ் சிவபெருமான்
அன்பால்நீ அகம்நெகவே புகுந்தருளி ஆட்கொண்ட(து)
என்பாலே நோக்கியவா றன்றேஎம் பெருமானே.

**உரைநடை :**—'எம்பெருமானே' என்பதை முதலிற்கொள்க.

**உரை :**—எமது தலைவனே ! இவ்வுலகத்தே என்மாட் டிருந்த பிறவியைக் களைந்து, வானவருமறிய வொண்ணாத, தென்திசையிலுள்ள திருப்பெருந்துறையிற் றங்கியருளுஞ் சிவபெருமானாகிய நீ, என்மீதுவைத்த தயவால், உள்ளம் நெகிழும்படி அதனுட் போந்தருளி ஆண்டுகொண்டது, நீ என்னிடமே திருநோக்கஞ் செலுத்திய முறைபற்றி யல்லவா ?

**குறிப்பு :**—பாலை=இடத்தே, ஐ, சாரியை. அன்பால்=தயவால் : அருளால். ௭

மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா
ஓத்தானே பொருளானே உண்மையுமாய் இன்மையுமாய்ப்
பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினால்
பேர்த்தேநீ ஆண்டவா றன்றேஎம் பெருமானே.

**உரை:**—(எமது தலைவனே! எல்லாவற்றிற்கும் முற்பட்டமையால்) மூத்தவனே! மூப்பு எய்தாத ஆதியே! எல்லையற்ற அருள்நூல் வடிவானவனே! அவற்றின் பொருளானவனே! மெய்யர்க்கு மெய்யாயும் அல்லாதார்க் கல்லாதானாகியும் தோன்றினவனே! இவ்வுலகிலே போந்து நின்று உலகவாழ்விற் புரள்கின்ற என்னைத் திருவருளினால் நீ அந்நிலை நின்று நீக்கி ஆண்டமுறைதான் என்னே?

**குறிப்பு:**—ஓத்து=ஓதப் படுவது; நூல். ஓத்தானே, பொருளானே, என்பதற்குச் சொல்லுலகமும் பொருளுலகமு மானவனே யென்று முரைப்ப; பேர்த்தே, மீண்டுமெனவு முரைப்ப. அ

மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச் சிவபெருமா னென்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமா
றருளெனக்கிங் கிடைமருதே இடங்கொண்ட அம்மானே.

**உரைநடை:**—இடைமருதே யிடங்கொண்ட அம்மானே, என்பதை முதலிற்கொள்க.

**உரை:**—திருவிடைமருதைத் தனது திருப்பதியாகக் கொண்ட எந்தையே! பொருந்துதற்கினிய உனது திருவடி மலர்கள் எனது உள்ளத்தில் நிலைவி யோங்கி, உள்ளமுருகவும், தெருவெல்லாம் மிகவும் ஓலமிட்டுச் சிவபெருமான் என்றியம்பி வழிபட்டு நின்னருளைப் பருகவும், உனது மேலான திருவருட் பெருங்கடலில் மூழ்குதலாகிய விதத்தை இவ்வுலகத்திலே நீ எனக்கு அருள் செய்க.

**குறிப்பு:**—உள்ளுருக என்பதற்கு, உயிர்ப்போதங் கெட எனவு முரைப்பர். பருகிய=பருக, செய்யிய வென்னும் வினையெச்சம். கூ

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

**உரைநடை:**—இறுதியடியை மூன்றாம் அடியில் 'புகுந்து' என்பதனை அடுத்தமைக்க.



அவையே தானேயா யென்பதனை *இரட்டுற மொழிந்துகொண்டுரைக்க. இக் கருத்தே பற்றி †"உலகெலாமாகி வேறாய் உடனுமாய்" என்றார் வழிநூ லாசிரியரும். ஆணையினென்பது ‡சிங்க நோக்காய் இருவினை என்பதனோடும், நீக்கமின்றி என்பதனோடும் இயைந்து பொருள்தந்து நின்றது. ஆண்டு இன்னுருபு, முன்னர் ஏதுப்பொருட் கண்ணும், பின்னர் நீக்கப்பொருட் கண்ணுமாய் நின்றது. இன்னென்பது சாரியை யெனக்கொண்டு ஈரிடத்தும் ஏற்கும் உருபுகள் விரித்துரைத்தலு மொன்று. அன்றே அசை; அநாதியே இவ்வாறு நிற்குமெனினு மமையும். ஆய்ப் புரிய நிற்குமெனவே, அச்செயல்களெல்லாம் முதல்வன் காணத்தானன்றிச் சங்கற்ப மாத்திரத்தாற் செய்வனென்பது பெறப்பட்டது. இதனானே மேல் 'அந்தம்' என்று உத்தேசமா யெடுத்துக்கொண்ட முதல்வனுக்கு இலக்கணங் கூறியவாறு மாயிற்று. இது தடத்தலக்கண மெனப்படும் பொதுவியல்பு. ஆணையினிருவினையினெனவே, தனது சிற்சத்தி துணைக் காரணம், இருவினையும் அதன் வழித்தாய துணைக்காரணம், இருவினையினெனவே அதற்குப் பற்றுக்கோ டுண்டென்பதூஉம் பெற்றாமாகலின், அது முதற்காரணமென்பதூஉம் இருவினையிற் போக்கு வரவு புரியவெனவே ஒடுங்கியின் மீளவுளதாங்கால் இருவினைகட் கேற்பப் பல வேறு வகைப்பட்டு விரியு மென்பதூஉம் போந்தவாறு காண்க. இதனுள் அவையே தானேயாய் என்பதோர் அதிகரணம்; ஆணையினிருவினையின் என்பதோரதி கரணம்; போக்கு வரவு புரிய என்பதோரதி கரணம்; ஆணையினீக்க மின்றி நிற்குமன்றே என்பதோரதி கரணம்; ஆக நாற் கூற்றது இச்சூத்திர மெனக்கொள்க.

## முதலதிகரணம்

ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் றானேயாய் நிற்கும் என்றது.

---

* இரட்டுற மொழிதல் ஒரு வாக்கியத்தில் இரண்டு பொருள் படச் சொல்லுதல்.

† சிவஞான சித்தியார், இரண்டாஞ் சூத்திரம். செ - க.

‡ சிங்க நோக்கு முன்னும் பின்னும் பார்க்கும் சிங்கத்தின் பார்வையை ஒப்பது.

மே—மேன் முதற் கடவுளல்லவென விலக்கப்பட்டு நின்ற சேதனப் பிரபஞ்சமும் முதல்வனும் பொன்னும் பணியும்போல் அபேதமோ? இருளும் வெளியும்போற் பேதமோ? சொல்லும் பொருளும்போற் பேதாபேதமோ? என்னும் ஐயப்பாட்டின்கண் அம்மூன்றனுள் ஒரோ ஒன்றேபற்றி அவ்வம்மதத்தார்கூறும் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

ஈண்டும் இரட்டுற மொழிந்துகொள்க. இதனானே, ஒரு விடயத்தைக் காணுங்கால் ஆன்மபோதம் கண்ணொளியெனத்தானென வேறின்றி உடனாய் நின்று காணுமாறுபோல, முதல்வன் புனருற்பவஞ் செய்யுங்கால் உயிர்களோடு உடனாய் நின்று செய்வனென்பதூஉம் பெறப்பட்டது.

அத்துவிதமென்ற சொல்லானே ஏகமென்னில் ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதமென்ற சொல்லே அந்நியநாத்தியை யுணர்த்துமாயிட்டு.

ஏ—முதல்வன் அவ்வாறு மூவகையுமாய் நிற்பனென்றற்குப் பிரமாணமென்னை என்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. அத்துவிதமென்ற சொல்லின் நகரம் இன்மை அன்மை மறுதலை என்னு முப்பொருளுணர்த்துமன்றே. அவற்றுள் இன்மைப் பொருள்பற்றி அத்துவிதமென்ற மொழிமாத்திரையானே ஒரு பொருளென்றல் பொருத்தமுடைத்தெனின்,—தானே தன்னை யொன்றெனக் கருதல் வேண்டாமையின் அவ்வாறு கருதும் பொருள் வேறுண்டென்பது பெறப்படுதலானும், எண்ணுப் பெயர்மேல் வந்த நகரம் அன்மைப்பொருண் மாத்திரையே' யுணர்த்திப் பொதுமையின் நிற்பதன்றி ஏனைச் சொற்களின்மேல் வந்த நகரம் போல இன்மை மறுதலைப் பொருள்களை யுணர்த்துதல் வழக்கின்கண் இன்மையின் அத்துவிதமென்கின்ற மொழி தானே பிறிது காரணம் வேண்டாது வேறின்மையை யுணர்த்தி நிற்குமாகலானும், ஈண்டிவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்றானேயாய் நிற்குமென மேற்கொண்டது.



ஆகலானென்பதற்கு ஆயிட்டென்பது அக்கால வழக்குப் போலும்; அற்றாகலினன்றே * "நீயோ செய்யாய் நின்மல னாயிட்டு" என்றார் வழிநூலாசிரியரும்; இனி "மழைபெய்து குளநிறைந்தது" என்புழிப்போல ஆயிடலானென்பது ஆயிட்டெனத் திரிந்து நின்றதென்றலுமொன்று. எண்ணும்மை விரித்துரைக்க. வேறின்றி உடனாதல் பெறப்படவே, பொருண்மையாற் பேதமென்பதூஉம் கலப்பினால் அபேதமென்பதூஉந் தாமே போதருமென்பது கருத்து.

கட்டு முறுப்பும் கரணமும் கொண்டுள்ளம்
இட்டதொரு பேரழைக்க என்னென்றாங்—கொட்டி
அவனுளமா கில்லான் உளமவனா மாட்டா
தவனுளமா யல்லனுமா மங்கு.

உ—ஒருபொருள் மூவகையியல்பை யுடைத்தாதல் யாங்ஙனம் என்னுங் கடாவை யாசங்கித்து அவற்றுள் அவையேயாதலை உவமைமுகத்தான் வலியுறுத்துதனுதலிற்று.

உள்ளம் கட்டும் உறுப்பும் கரணமுங்கொண்டு - உயிர் நரம்பு முதலியவற்றாற் பிணிக்கப்படும் உடம்பினையும் ஐம்பொறி முதலிய கருவிகளையுங் கைக்கொண்டு நின்று,—இட்டது ஒரு பேர் அழைக்க என் என்றாங்கு - சாத்தா கொற்றா என உடம்பிற் கிட்ட பெயராற் பிறரழைத்த வழித் தான் என்னையென வந்து நிற்றல் காண்டுமன்றே, இருவர் கைகோத்து நின்றுழியும் அவருள் அழைக்கப்பட்டோனேயன்றி ஏனோன் என்னை யென்றல் உலகத்தின்மையின் அவ்வாறன்றி உடம்பின் பெயரான் அழைத்த வழி உயிர் என்னென்றற்குக் காரணம் பிறிதோராற்றாற் பெறப்படாமையின் அருத்தாபத்தியளவையானே அவ்வுயிர் உடம்பெனத் தானென வேற்றுமையின்றி அபேதமாய் நிற்றல் பெற்றாம். அதுபோல,—ஒட்டி - முதல்வன் உயிர்களின் அபேதமாய் ஒட்டி நிற்போனும்,—அங்கு அவன் உளம் ஆகில்லான் உளம் அவனாமாட்டாது அவன் உளம் ஆய் அல்லனும் ஆம் - அவ்வாறொட்டிய வழியும் உயிர் உயிரே, உடம்பு உடம்பே, உயிர் உடம்பாயொழியாது உடம்பு உயிராகமாட்டாது. அவ்வாறாயினும் உயிர் உடம்பாயும் அதனின் வேறாயு நிற்கும்,

* இருபாவிருபது. செ - ச. கூறிய மூன்று.

உடம்பு அங்ஙனம் நில்லாது, அதுபோல முதல்வன் முதல்வனே, உயிர் உயிரே, முதல்வன் உயிராயொழியான், உயிர் முதல்வனாக மாட்டாது. அவ்வாறாயினும் முதல்வன் உயிராயும் அதனின் வேறாயு நிற்பன். உயிர் அங்ஙனம் நில்லாது.

ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்றென்றநீ பாசத்தோ டுளேகாண்—ஒன்றின்றால்
அக்கரங்கள் இன்றாம் அகர உயிரின்றேல்
இக்கிரமத் தென்னும் இருக்கு.

உ—வேதத்துள் அத்துவித மென்றதூஉமன்றி ஏகமெனவு மோதுதலின் அதற்கு மறுதலையாய் உயிர்களோடொட்டி நிற்பனெனப் பேதப்படக் கூறுவதென்னை என்னுங்கடாவை யாசங்கித்து அச்சொற்குத் தாற்பரியங் கூறு முகத்தால் தானே யாதலை வலியுறுத்துதனுதலிற்று. இருக்கு ஒன்று என்றது ஒன்றே காண் - வேதம் ஒன்றென்றதற்குப் பொருள் ஒன்றென்பதேயாம்; வேறு பொருள்படாது.—ஒன்றே பதி - அதற்குத் தாற்பரியம் பதிப்பொருளொன்றே; இரண்டில்லை யென்பதாம்,—ஒன்று என்ற நீ பசுவாம் காண் - இஃதறியாது ஒன்றென்று சொல்லுகின்ற நீ அப்பதிப்பொருளின் வேறாய பசுவென்றறிவாயாக. பதியுஞ் சேதனமாக யானுஞ் சேதனமாக என்னைப் பசுவென்ற தென்னை யெனின்,—பாசத்தோடு உளை - நீ மலத்தோடு கட்டுற்று நின்றாயாகலிற் பசுவெனப்பட்டனை. அற்றேல் இவ்வாறு வேற்றுமை கூறிற் பிரமமில்லையாயின் ஒரு பொருளுமில்லை யென்னும் வேதத்திற்குத் தாற்பரியமென்னையெனின்,—அகரவுயிர் இன்றேல் அக்கரங்கள் இன்று ஆம் இக்கிரமத்து ஒன்று இன்றால் என்னும் - அகரவுயிரில்லையாயின் அக்கரங்களில்லையாமென்னும் இம் முறைபற்றி வேதம் பிரமப்பொருள் இல்லையாயின் ஒரு பொருளுமில்லை யென்றோதும் அத்தனை. ஒன்றின்றா லக்கரங்களின்றாம் அகர வுயிரின்றே லிக்கிரமத் தென்னும் என்றது வேறாகியும் வேறன்மைக்கு அநுபவங் காட்டியவாறு.

பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணுஞ் சுவையும்போல் எங்குமாம்—அண்ணல்தாள்



அத்துவித மாதல் அருமறைகள் ஒன்றென்னா(து)
அத்துவிதம் என்றறையும் ஆங்கு.

உ—வேதம் ஏகமாய பிரமத்தை ஏகமென்றொழியாது பிரமம் அத்துவிதமெனவும் ஓரோரிடங்களின் ஓதுதலின், அத்துவிதம் இருபொருட் கண்ணதென்பார்க்கு ஏகமாய பிரமத்தை அத்துவித மென்றல் பொருந்தாதாய் முடியும் என்னுங்கடாவை யாசங்கித்து அதனை நீக்கு முகத்தானே அவையே தானே யாதலை வலியுறுத்துதனுதலிற்று. பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும் எண்ணும் சுவையும்போல் எங்கும் ஆம் அண்ணல் தாள் அத்துவிதம் ஆதல் - பண்ணும் அதனின் வேறன்றா யெண்ணப்படும் இசையும் போலவும் பழமும் அதனின் வேறன்றா யெண்ணப்படுஞ் சுவையும் போலவும் யாங்கணும் வியாபகமாய முதல்வன்றிருவருள் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்பதாகலான்,—அரு மறைகள் ஒன்று என்னாது அத்துவிதம் என்று ஆங்கு அறையும் - வேதங்கள் ஏகமென்னாது பிரமம் அத்துவிதம் என்று அவ்விடங்களிற் கூறும். ஆண்டுப் பிரமம் அத்துவிதமென்றது பிரமம் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்குமென்னும் பொருட்டாகலான், அஃது ஏகமென்பதோடு முரணுமாறில்லை யென்பதாம். எங்குமாமண்ணல்தாளென விசேடித்தது. குண குணிகள் போல் உடனாயும், அவ்வாறுடனாகாமைக்கு அநுபவங் காட்டியவாறு. வியாப்பிய வியாபகமாத லொப்புமை மாத்திரையே பற்றிக் குண குணிகளை உவமை கூறினாரென்பது.

அரக்கொடு சேர்த்தி அணைத்தஅக் கற்போல்
உருக்கி உடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித்
தானே உலகாந் தமியேன் உளம்புகுதல்
யானே உலகென்பன் இன்று.

உ—இங்ஙனம் வெவ்வேறுவமை யெடுத்துக் காட்டின் அநேகாந்தவாதமா மென்னுங் கடாவை யாசங்கித்து அஃதாகாமை உவமை முகத்தான் விளக்கி மூன்றனையும் ஒருங்கே வலியுறுத்துதனுதலிற்று

உருக்கி அரக்கொடு சேர்த்து அணைத்த அக்கற்போல் உடங்கு இயைந்து நின்று பிரிப்பு இன்றித் தானே உலகு ஆம் - அரக்கை யுருக்கி அதனோடு சேர்த்து அணைத்த கற்பொடி அவ்வரக்கினோடொன்றாய் ஒருங்கியைந்து நீக்கமின்றி நின்றாற்போல, முதல்வன்

உயிர்களின் ஒருங்குகூடி நின்று நீக்கமின்றி உடனுகலால், தானேயாம், உலகேயாம், தானே உலகேயாம். அற்றேல், வாமதேவ முனிவன் முதலியோர் யானே உலகெல்லாமாயினேன் எனக் கூறுதலானும், சர்வஞ்ஞானோத்திரத்தில் யானே எல்லாமாய் அல்லனுமாய் உடனுமாய் நின்றேன் என்று உயிர்கண்மேல் வைத்தோதுதலானும், உயிர்களும் இவ்விலக்கணத்தனவாவான் செல்லும்போலுமெனின்,—தமியேன் உளம் புகுதல் யானே உலகு என்பன் இன்று- அம்முதல்வன் பாசக்கூட்டத்தினீங்கித் தனியாய் நின்ற என்னகத்துச் சோகம் பாவனையாற் புகுந்து வேற்றுமையின்றித் தோன்றலான் யானே யுலகெல்லா மென்பேனுயினேன் இம்முத்தி காலத்து. ஆகலின், அதுபற்றி உயிர்களும் அவ்வாருவான் சேறலின்று.

இவ்வொற்றுமைபற்றி யன்றே அருச்சுனற்குக் கீதைநூல் செவியறிவுறுத்த கண்ணன் யானே யுலகெல்லாமாயினே னென்றதூஉம், முதல்வனது விசுவ ரூபத்தைத் தான் காட்டியதூஉம், ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுக என்றதூஉம், அதனை உறுதியாகக் கொண்ட அருச்சுனன் அவன் கூறிய கருத்து நோக்கிச் சாங்காறுஞ் சிவபூசை செய்ததூஉம், கண்ணன்மேலிட்ட போதுகள் முதல்வன் திருமுடிமேற் கண்டதூஉமென்க. கண்ணன் உபமன்னியு முனிபாற் சிவதீக்கை யுற்றுத் தன்னையுந் தலைவனையும் உணர்ந்தோனுகலிற் சிவோகம் பாவனையைத் தலைப்பட்டோனுதலறிக.

கலப்பாய் நிற்றலான் உலகேயா மென்பார் உடங்கியைந்து எனவும், பொருட்டன்மையால் வேறு நிற்றலால் தானேயாமென்பார் நின்று எனவும், உயிர்க்குயிராய் நிற்றலால் தானே யுலகாமென்பார் பிரிப்பின்றி எனவுங் கூறினுர். ஈண்டும் இரட்டுற மொழிந்து கொண்டுரைக்க. இவ்வதிகரணத்தானே பேதமென்றும் அபேதமென்றும் பேதா பேதமென்றும் பிணங்குஞ் சமயிகளையெல்லாம் மறுத்து அம்மூவகை இயல்புந் தன் கட்டோன்ற நிற்கும் அத்துவிதத்துண்மை ஏதுக்களானும் உவமைகளானும் உணர்த்தியவாறு. புடை நூலாசிரியரும் இவ்வதிகரணப் பொருளேபற்றி *"புறச்சமயத்தவர்க்கிருளாய்—தெரிக்கலுற்ரும்." என வகுத்தோதினுர்.

* சிவப்பிரகாசம், பாயிரம் - எ.



## இரண்டாம் அதிகரணம்

இனி இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வனுணையின் வரும் என்றது.

**மே**—முதல்வன் அவ்வாறு உயிர்களோடியைந்து நின்று புனருற்பவஞ் செய்யுங்கால் உலகத்துக்குப்போல் அவனுக்குத் துணைக்காரண முதலியன வேண்டப்படுமோ படாவோ என்னும் ஐயப்பாட்டின்கண் முதல்வனது சுதந்திரத்திற்கும் அளவிலாற்றற்கும் இழுக்காய் முடியுமாகலின், அவனுக்கு அவை வேண்டப்படா எனப் பரிணுமவாதிகள் கூறுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. ஈண்டு இருவினை யென்றது முற்பிறவிகளினீட்டப்பட்டு மாயையிற் கட்டுப்பட்டுக் கிடந்த புண்ணிய பாவங்களை என்க ; எனவே, மாயையினுண்மையும் பெறப்பட்டது. இவை வேண்டப்படுதல்பற்றி முதல்வன் சுதந்திரத்திற்கு இழுக்கில்லை யென்பார் முதல்வனுணையின் வரும் என்றுர்.

ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை அவனதாக் கினையாகலான்.

**ஏ**—ஆணையே யமையும், இருவினை எற்றுக்கு என்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. ஒரு பட்டணத்தைப் புரக்கும் வேந்தன் பாடிகாவற் ரெழிலைக் களைகணுவா னொருவன்மாட்டு வைத்தாற்போல எல்லாவறிவு முதன்மை அநுக்கிரகங்களுடைய அம்முதல்வன் புனருற்பவத்தைச் செய்வதாகிய தனது ஆணையை அவ்விருவினைக்கண்மாட்டு வைத்து நடாத்துதலே முறையாகலான், இனி இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வனுணையின் வரும் என மேற்கொண்டது. முதல்வன் செய்யுஞ் செய்தியெல்லாம் உலகத்தோடொப்ப நிகழ்வனவாகலின் ஈண்டைக்கு அரசன் செய்தி உவமையாயிற்று. பாடிகாவலாவது களைகணுவா னொருவனைக் கொண்டு வேந்தன் செய்விப்பதொருதண்டத் தொழில் விசேடம், அது *" கோடி காவனைக் கூறுத நாளெலாம்—பாடி காவலிற் பட்டுக்

* திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம், திருக்கோடிகாத் திருக்குறுந்தொகை - க. நாடிநாரணன்.

கழியுமே" என்னுந் திருப்பாட்டானுமறிக. இஃதறியாதார் தத் தமக்கு வேண்டியவாறெல்லாமுரைப்ப.

உள்ளதே தோற்ற உயிரணையும் அவ்வுடலின்
உள்ள தாம் முற்செய்வினை உள்ளடைவே—வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளைக்குஞ் செய்யேபோற்
செய்வன் செயலணையா சென்று.

உ—வினை உண்டென்பதற்கும் அதுவே உயிர்க்குப் பயனாய் வருமென்றற்கும் மேல் வினையேறுமாற்றிற்கும் அது முதல்வனை இன்றியமையாமைக்கும் பிரமாணமென்னை என்னுங் கடாவை யாசங்கித்து ஏதுவை வலியுறுத்துத னுதலிற்று. உள்ளதே தோற்ற - இல்லது தோன்றாதென்பது மேற்கூறிப் போந்தமை யான் முன் உள்ளதாய புண்ணிய பாவமென்னும் இருகூற்றுச் சஞ்சித வினையே தன் பயனாகிய இன்ப துன்பங்களையும் அவை நுகர்தற்குரிய நிலைக்களமாகிய உடம்பினையுந் தோற்றுவிப்ப,—உயிர் அவ்வுடலின் அணையும் - அவ்வின்ப துன்ப நுகர்ச்சி சடத்துக்குக் கூடாமையிற் சித்தாகிய உயிரே அவ்வுடம்பிற் பொருந்தி அவற்றை யநுபவிக்கும். முன் வினையை ஈண்டநுபவித்தொழிந்தால் மேலைக்கு வினையுண்டா மாறியாங்ஙனமெனின்,—முன் செய்வினை உள் அடைவே உள்ளதாம் - முன் செய்த வினை அநுபவித்தற்கேதுவான முறைமையிலே மேலைக்கு வினையுளதாம். அற்றேல், அவ்வினையே பயனாக வருமெனவமையும், முதல்வன் எற்றுக்கெனின்,—செய்பவர் செய்திப் பயன் விளைக்குஞ் செய்யேபோல் - உழவர் செய்யுந் தொழிற்குத் தக்கபயனை விளைநிலம் விளைவிப்பதன்றி அத்தொழில் தானே விளைவிக்கமாட்டாததுபோல,—வள்ளலவன் செய்வன் - உண வும் வித்துமாய்த் தொன்று தொட்டு வரும் அவ்வினைகளை வள்ள லாகிய முதல்வனே அவ்வுயிர்கட்குக் கூட்டுவன்,—செயல் சென்று அணையா - அவ்வாறன்றி வினை தானே உயிர்கட்குப் பயனாய் வந்து பொருந்தமாட்டாது.

வள்ளலென்றார், தற்பயன் குறியாது *"வேண்டுவார் வேண்டிய" வாறே நல்கும் அருளுடைமை நோக்கி. உள்ளடைவு உள்ளுதற்

* திருநாவுக்கரசு நாயனார் தேவாரம், திருமறைக் காட்டுத் திருத் தாண்டகம். - க. தூண்டு சுடரனைய.



கேதுவாகிய அடைவென விரியும். ஏகாரம் எழாவதன் பொருட்கண் வந்தது. உள்ளுதல் ஈண்டநுபவித்தல்: அதற்கேதுவாகிய முறை மையாவன அநுபவித்தற்குத் துணைக்காரணமாகிய விருப்பு வெறுப் புக்கள். அவற்றின்க ணுண்டாமாறு முன்னர்க் காட்டுதும். மேல் முதல்வனுக்கு வினை வேண்டப்படுமென்பதற்கு அரசனை யுவமை கூறினார்; ஈண்டு வினை முதல்வனை யின்றியமையாதென்பது உணர்த்துதற்கு உழவுதொழிலை யுவமை கூறினாரெனக் கொள்க.

அவ்வினையைச் செய்வதனில் அவ்வினைஞர் தாஞ்சென்றங்(கு)
அவ்வினையைக் காந்த பசாசம்போல்—அவ்வினையைப்
போமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு.

உ—இருவினை சடமாகலிற் சென்றணைய மாட்டாவாயினும் உயிர்கள் சேதனமாகலின் அவையே அவற்றது பயனை யறிந்து எடுத் துக்கொண்டு நுகரும், வள்ளல் எற்றுக்கு என்னுங் கடாவை யாசங் கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று. காந்த பசாசம்போல் - ஒரு வனெடுத்து நேரொக்கப் பிடித்த வழி இரும்பினை வலித்துக்கொள் ளுங் காந்தம்போல,—அவ்வினையைப் போமல் ஊட்டும் பிரானின் - அவ்வினைப் பயன்களைப் பிறழாமல் நுகர்விக்கும் முதல்வனால்,—அவ் வினைஞர் தாம் - அவ்வினைகளைச் செய்யும் ஆன்மாக்கடாம்,—அவ் வினையைச் செய்வதனில் சென்று அங்கு அவ்வினையை நுகராரேல் ஆர் தாம் அறிந்து அணைப்பார் - அவற்றைச் செய்தற்குரிய நிலைக்கள மாகிய உடம்பின்கட் பொருந்தி அவற்றது பயனை அநுபவிப்பர்; அவ்வாறநுப வியாராயின், வேறே எவர்தாம் அவற்றை யறிந்து கூட்டுவார்,—ஆங்கு - அறிவுஞ் சுதந்திரமுமின்றி மலத்தின் மறைப் புண்டு கிடக்கும் அப்பெத்த காலத்து.

ஒருவருமில்லை யென்பதாம். ஆன்மாக்களுக்குத் தமக்கென அறிவின்மையானும் வினை சடமாகலானும், மாயை தாரகமாமத்தன் றுணிற்றல் எனப்போந்தமையானும், முதல்வனே அறிந்தணைப்ப னெனப் பாரிசேடவளவை கூறுவார், பிரானின் நுகராரேலார்தா மறிந்தணைப் பாரென்றார். இது சொற்பொருட்பின் வருநிலை.

நெல்லிற் குமியும் நிகழ்செம்பி னிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி

மலகன்மம் அன்றுளவாம் வள்ளலாற் பொன்வாள்
அலர்சோகஞ் செய்கமலத் தாம்.

உ—அவ்வினை ஆதியோ? அநாதியோ? ஆதியெனின் முன்பில்லது இடையே தோன்றுமென்பது சற்காரிய வாதத்துக்கேலாது, அநாதியெனின் ஒருவர் கூட்ட வேண்டுவதில்லை யென்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று. நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பினில் களிம்பும் சொல்லின்புதிது அன்று தொன்மையே-நெல்லின்கண் உமியும் செம்பின்கட்களிம்பும் எக்காலத்துளவாயின வென்று ஆராய்ந்து சொல்லுங்கால் அந்நெல்லுஞ் செம்பும் உளவாயினவன்றே உள்ளனவன்றி இடையே வந்தனவல்ல; அதுபோல,—வல்லி மலகன்மம் அன்று உளவாம்-மாயை மலம் கன்மமென்னு மும்மலங்களும் அநாதியே யுள்ளனவாம்,—கமலத்து அலர் சோகம் பொன் வாள் செய் வள்ளலால் ஆம்-முன்னேயுள்ளதாய தாமரைப்பூ அலர்தலும் கூம்புதலும் ஞாயிற்றினாற் செய்யப்படுமாறுபோல அவை தத்தங் காரியங்களைச் செய்தல் முதல்வனாலேயாம்.

மாயை இறைவனுக்குப் பரிக்கிரக சத்தியாகலின், வல்லியென்றார். வினைக்குத் தொன்மை கூறுவார் இனம்பற்றி மாயை மலங்களுக்குந் தொன்மை கூறினார். மூல மலத்தின் காரியம் மோகம் மத முதலாயின. இருவினையின் காரியம் இன்பத்துன்பம் முதலாயின. மாயையின் காரியம் தநுகரண முதலாயின. வள்ளலாலாமெனவே திரோதான சத்தியது உண்மையும் பெற்றாம். அது பாகம் வருவித்தற் பொருட்டு மலத்தின் வழி நின்று மோக முதலியவற்றைத் தொழிற்படுத்துவதாகிய சிவசங்கற்பத்திற் கேதுவாதல் பற்றி மலமென்றுபசரித்துக் கூறப்படும். இவ்வாறு மலகன்மமாயை திரோதனம் மாயாகாரிய மென்னும் ஐவகைப்பாசமுங் கண்டுகொள்க. இவற்றுள் மாயை சுத்தமாயை அசுத்தமாயை என்றிருவகைப்படும். இவ்விரண்டனுட் சுத்தமாயையின் காரியமே அசுத்தமாயை யென்பாரும், சுத்தமாயைபோல அசுத்தமாயையும் அநாதியேயா மென்பாரும், ஒன்றுதானே ஊர்த்துவமாயை அதோமாயை யென்றிரு வகைப்படு மென்பாரும் எனப் பலதிறத்தர் ஆசிரியர். இனி முதல்வனது கிரியாசத்தியே சுத்தமாயை எனப்படுமென்பாருமுளர். அது முதல்வனுக்குத் தாதான்



மியசத்தியாகலிற் பரிக்கிரக சத்தியாகிய சுத்தமாயையாதல் யாண்டையதென்றொழிக. சுத்தமாயையினின்றும் பஞ்ச கலைகளும் நால்வகைவாக்குஞ் சிவதத்துவமைந்துஞ் சுத்தகாலமுதற் சுத்தநிலமீறாகிய முப்பத்தொன்றுந் தோன்றும். அசுத்தமாயையினின்றும் அசுத்த காலமுதல் அசுத்த நில மீறாகிய முப்பத்தொரு தத்துவங்களுந் தோன்றும். இந்தத் தத்துவங்களெல்லாம் பொதுவுஞ் சிறப்பும் பொதுச் சிறப்புமெனத் தனித்தனி மூவகைப்பட்டு உயிர்கடோறும் வெவ்வேறுளவாம்.

கன்மமும் *“நாசோற்பத்தி பண்ணிவருமாதலா லநாதி” என்பதுபற்றிப் பிரபஞ்சம்போலப் பிரவாகாநாதி யென்பாருந், †“ஏகனநேக னிருள்கரும மாயை யிரண்—டாகவிவை யாறுதியில்.” எ-ம். ‡“ஆணவ முதலன் றதுபோற் கருமமும்” எ-ம். ஒப்ப வோதுதல்பற்றி மூவகை வினைக்கும் முதற்காரணமாய மூலகன்மமொன்று அநாதி நித்தமாயுண்டென்பாரு மென்று இருதிறத்தராசிரியரென்க. இவ்வினையீட்டப் படுங்கால், மந்திரமுதலிய அத்துவாக்களிடமாக மனம் வாக்குக் காயமென்னும் மூன்றானீட்டப்பட்டு, தூலகன்மமாய் ஆகாமியமெனப் பெயர்பெற்று, பின்னர்ப்பக்குவமாங்காறுஞ் சூக்குமகன்மமாய்ப் புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிற் கிடந்து, சாதி ஆயுப் போகமென்னும் மூன்றற்கு மேதுவாய் முறையே சனகந் தாரகம் போக்கியம் என்னும் மூவகைத்தாய், அபூருவம் சஞ்சிதம் புண்ணிய பாவமென்னும் பரியாயப் பெயர் பெற்று, பின்னர்ப் பயன்படுங்கால் ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதிபௌதிகம் என்னு முத்திறத்தாற் பலதிறப்பட்டு, பிராரத்தமெனப் பெயர்பெறும். ஆதிபௌதிகமாவது சடம் வாயிலாக வருவது. ஆத்தியான்மிகமாவது சடத்தோடு கூடிய சேதனம் வாயிலாக வருவது. ஆதிதைவிகமாவது ஒரு வாயிலானன்றித் தெய்வந்தானே காரணமாக வருவது. இன்னும் இவ்வினைகள் உலகம் வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம் மாந்திரம் என்று ஐவகைப்பட்டு ஒன்றற்கொன்று ஏற்றமுடைத்தாய் முறையே நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகளினடங்கி, அசுத்தம் மிச்சிரம் சுத்தமெனப்படும் போகங்களைப் பயப்பிக்கு மென்றறிக.

---

* சிவப்பிரகாசம், பொது. கசு. நண்ணியிடு.

† திருவருட் பயன், அறியுநெறி - உ. ‡ ஞானமிர்தம் - உஉ - ரு.

## மூன்றும் அதிகரணம்

### இனி இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வருமென்றது.

மே—புனருற்பவம் சடத்துக்கன்றிச் சித்துக்கு முளதாயினன்றே முற்செய்வினையே ஈண்டைக்கு வருமென மேற்கூறியதமையும், அஃதுண்டோ? இல்லையோ? என்னுமையப்பாட்டின்கட் குடமுடைந்த வழிக்குடாகாயம் ஆகாயத்தோடு கூடுமாறுபோல உடம்பு நீங்கியவழி உயிர் பிரமத்தோடு கூடுமென்னுஞ் சுருதிபற்றி இறந்தவுயிர் மீளப்பிறப்பதில்லையெனக் கிரீடாப்பிரமவாதிகள் கூறுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் மூன்றுங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

வருதல் தொன்று தொட்டவ்வாறுதல். மாறுதல் ஈண்டிறத்தலென்பது 'போக்குவரவு புரிய' என்னு மூலத்தானும், ஏதுவதாரணங்களோடு உளதாகிய இயைபானுமுணர்க. இஃதுணராது அச்சுவேறு படுதலென்றுரைப்பாரு முளர். அஃதீண்டைக்கியாது மியையாமை யுணர்க.

தோற்றமுமீறும் உள்ளதற்கல்லது உளதாதலின்மையான்.

ஏ—அதற்குப் பிரமாணமென்னை யென்னுங் கடாவையாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. உற்பத்தியும் நாசமுந் தொடர்ச்சியாயுள்ள பொருட்கன்றி ஏனைப்பொருட்கு உற்பத்தி கூடாமையான் இனி இவ்வான்மாக்களே மாறிப் பிறந்து வருமென மேற்கொண்டது.

தோற்றமும் ஈறுமென்னும் உம்மைகளை எதிரது தழீஇயினவாகக் கோடலிற் றொடர்ச்சியாமென்பது போந்தவாறறிக. உளதாதல் ஈண்டுத் தோன்றுதல். இனி இவ்வாறன்றிக் குடாகாயவுவமையே பற்றி இருவினையான் வரும்புனருற்பவம் உயிரின் பொருட்டுச் சிவத்துக்கேயாமெனச் சிவாத்துவிதிகள் கூறுங் கடாவையாசங்கித்தும் மூலப்பகுதியிற் றோன்றும் புத்தி தத்துவத்திற்கே அதுவெனச் சாங்கியர் கூறுங்கடாவை யாசங்கித்தும் மேற்கோடனுதலிற்று இவ்வதிகரணமெனக் கொண்டு தோற்றமும் ஈறும் அவ்வுரிமை யுள்ளதற்கேயன்றி ஏனையவற்றிற்கு உளதாதலின்மையான் இவ்வான்



மாக்களே மாறிப் பிறந்துவருமென மேற்கொண்டதென்றுரைப்பினுமாம். இப்பொருட்கு உரிமையென்பது அவாய் நிலையான் வந்தது. இனி மாயாவதி முதலியோர் மதத்தை மறுத்தற்பொருட்டு மேற்கொண்டதென்பாருமுளர். அத்துவிதமென்ற சொல்லானே அவரை மறுத்து ஆன்மாக்களைப் பெறுவித்தமையின் ஈண்டவர் மதம் பற்றிக் கடா நிகழ்தற்கோ ரியைபின்மை யுணர்க.

> கண்ட நனவைக் கனவுணர்வில் தான்மறந்து
> விண்படர்ந்தத் தூடு வினையினால்—கண்செவிகெட்(டு)
> உள்ளதே தோற்ற உளமணுவாய்ச் சென்றுமனந்
> தள்ள விழுங்கருவில் தான்.

உ—புனருற்பவமாங்காற்படும் இயல்புகளுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

கண் செவிகெட்டு உள்ளதே தோற்ற உளம் அத்தூடு விண் படர்ந்து கண்ட நனவைக் கனவு உணர்வில் தான் மறந்து மனம் தள்ள வினையினால் அணுவாய்ச் சென்று கருவில் விழுந்தான் எனக் கொண்டு கூட்டுக. கண் செவி கெட்டு உள்ளதே தோற்ற - கண் செவி முதலிய உறுப்புகளை யுடைய இவ்வுடம்பு கெட்டவழித் தனக்குக் கேடின்றிப் படைப்புகாலந் தொடங்கிச் சங்காரகாலமளவும் நிலைபெற்றுள்ளதாகிய சூக்கும தேகம் பூதசார உடம்பு முதலியனவாய்க் காரியப்பட,—உளம் அத்தூடு விண்படர்ந்து - உயிரானது அப்பூதசார முதலிய உடம்பின்கட் பொருந்தித் துறக்க நிரயங்களிற் சென்றனுபவித்து, பின்னர்,—கண்டநனவைக் கனவு உணர்வின் தான் மறந்து - நனவின்கட் கண்டவற்றை கனாக் காணுங்காலத்து மறந்து அறிவு வேறுபட்டாற்போல, முன்னைக் கண் செவி கெட்டவாறும் உள்ளதே தோற்ற அத்தூடு விண் படர்ந்தவாறும் ஆண்டநுபவித்தவாறுமாகிய இன்னோரன்னவற்றை மறந்து அறிவு வேறுபட்டு,—மனந் தள்ள வினையினால் அணுவாய்ச் சென்று கருவில் விழும் தான் - முன்னுடம்பு இறக்குங்கால் அடுத்த வினை காட்டுங் கதி நிமித்தம்பற்றி உயிர் அவாவுமாறு மனஞ் செலுத்துதலான் அக்கதிக்கட் சேறற்கேதுவாய் எஞ்சி நின்ற புண்ணிய பாவசேடத்தாற் சூக்கும தேகமாத்திரையாய்ச் சென்று அம்மனந்தள்ளிய கதிக்கு அமைந்த அக்கருவின்கட்படும்.

உடம்பு நீங்கிப் போங்கால் முதற்கட் கெடுவன கண்ணுஞ் செவியுமாகலின், அச்சிறப்பு நோக்கிக் கண் செவி கெட்டென்றுபசரித்தார். கெட்டவழி என்பது, கெட்டெனத் திரிந்து நின்றது. ஐம்பெரும் பூதத்தின் காரியமெனப்பட்ட தூலவுடம்பு சூக்குமவுடம்பின் காரியமாமாறென்னை யென்னும் ஐயநீக்குதற்கு உள்ளதே தோற்றவென்றார். ஆகாய முதலிய தூல பூதங்கள் சத்த முதலிய சூக்கும பூதங்களின் காரியமாதலின், அதுபற்றியே தன்மாத்திரை மயமாகிய சூக்கும உடம்பிற் றோன்றுவதாய தூலவுடம்பு ஐம்பெரும் பூத மயமெனப்பட்டதன்றிப் பிறிதில்லை யென்பது *"பூதனை சரீரம் போனாற் புரியட்ட ரூபந்தானே-யாதனை சரீரமாகி" †"சூக்கும வடிவதென்னிற் றூலகாரணமதாகும்." ‡"தூலமா முருவினுக்குச் சூக்கும முதல்." ¶"மாறியிவ் உருவமெல்லாம் வருவதெங்கே நின்றென்னிற் கூறிய சூக்குமத்தாம்" ||"விதிப்படி சூக்குமத்தே யுருவரும்." §"மனுதிதருமுடல்." என வழிநூலாசிரியரும் இவ்வாறே கூறியவாறு காண்க. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப. அது தோன்றுங்கால் Ψ"காலமுற்று - நீக்கிட மரம்பின் வேரோர் நீண்மர நிகழ்த்து" மாறுபோலச் சூக்குமவுடம்பு கெடாது நிற்பத் தூலவுடம்பு @"வேறொரு குறியாமாரம் வீரசங்கிலியுமா" தல்போல வினைக்கீடாக அச்சுவேறுபட்டு $"மதிக்கெழு கலைகள்போல வருவது போவதாம்." என்பதூஉம் வழி நூலாசிரியர் கூறியவாற்றானறிக. உள்ளதே தோற்ற வென்றதனால் உடற்றிரிவும், விண்படர்ந்தென்றதனால் இடத்திரிவும், கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்தென்றதனால் அறிவுத்திரிவும் பெறப்பட்டன. உள்ளதே தோற்றவென்றதனால் புதிது புதிதாய்த் தோற்றுதல்பற்றிச் சற்காரிய வாதத்திற்கு இழுக்கின்மையும், அத்தூடு விண்படர்ந்

* சிவஞான சித்தியார், இரண்டாஞ் சூத்திரம் - ௩௬.

† ஷை நான்காஞ் சூத்திரம்-௧0. ‡ஷை இரண்டாஞ் சூத்திரம்-௫0.

¶ ஷை உ-ம் சூத்திரம் - ௪௭. || ஷை உ-ம் சூத்திரம் - ௪௯.

§ பதினொன்றாஞ் சூத்திரம் - ௩. அநாதி.

Ψ சிவஞான சித்தியார், இரண்டாஞ் சூத்திரம். ௪௮. சூக்கு.

@ ஷை சூத்திரம். ௪௭. மாறியிவ்வுருவ.

$ ஷை சூத்திரம். ௪௯. விதிப்படி.



தெனவும், அணுவாய்ச் சென்று கருவில் விழுமெனவுங் கூறியதனால் போக்குவரவுபற்றி வியாபகத்துக்கு இழுக்கின்மையும், வினைச்சேடத்தாலென்றதனால் துறக்க நிரயங்களின் அநுபவித்தொழிந்தமைபற்றிப்புனருற்பவகாரணத்திற்கு இழுக்கின்மையும், மனந் தள்ளவென்றதனால் அஃதெஞ்சுதற்கேதுவுங் காட்டியவாறு. வேதத்துட் கூறப்படும் பஞ்சாக்கினி வித்தையின் இயல்புணர்த்துவார் கண்செவி கெட்ட வழி விண் படர்ந்து மறந்தணுவாய்ச் சென்று கருவில் விழுமென்றார். பஞ்சாக்கினி வித்தையினியல்பு நீலகண்டபாடியத்துட் காண்க. மறந்து விண்படர்ந்தெனக் கூட்டியுரைப்பாருமுளர். துறக்க நிரயங்களிற் படர்ந்து அநுபவிப்புழி அறிவுதிரியாமை புராணங்களுட் காண்க.

அரவுதன் தோலுரிவும் அக்கனவும் வேறு
பரகாயம் போய்வரும்அப் பண்பும்—பரவிற்
குடாகாய ஆகாயக் கூத்தாட்டாம் என்ப(து)
அடாதுள்ளம் போமா றது.

உ—உயிர்க்குப் புனருற்பவமாகாமைக்கு வாதிகளான் எடுத்துக் காட்டப்படுங் குடாகாய ஆகாயவுவமைக்குப் பொருள் கூறி மேலதனை வலியுறுத்துதனுதலிற்று. அரவு தன் தோல் உரிவும் அக்கனவும் பரகாயம் போய் வரும் அப் பண்பும் பரவில் வேறு - கண் செவி கெட்ட வழி உள்ளதே தோற்ற அத்தூடு விண் படர்தற்குப் பாம்பு தோலுரித்துப் புதிதொரு தோல் போர்த்துச் சேறலும், புருடன் நனவுடம்பினீங்கிக் கனவுடம்பிற் சேறலும், யோகிகள் தம்முடம்பு நீங்கிப் பரகாயத்திற் சென்று மீடலுமாகிய இவ்வுவமைகள் மிக்கு வழங்குதற்கண் இவற்றிற்கு மாறாக,—குடாகாய ஆகாயக் கூத்தாட்டு ஆம் என்பது அடாது - குடவாகாயங் குடமுடைந்தவழி ஆகாயத்தோடு கூடுமாறு போல்வதோர் கூத்தாட்டாமென்று நீ கூறுதல் பொருந்தாது.—உள்ளம் போம் ஆறு அது - சூக்குமவுடம்பு விட்டுப் போமாற்றிற்கே அவ்வுவமையாகலான்.

எனவே, உடல் விட்டுப் போமாற்றிற்கு இவ்விருவகையுவமைகளும் ஆகமங்களிற் கூறுதலின், அவை தம்முண் முரணுதவாறு, அரவுதன்றோலுரிவு முதலியன தூலவுடல் விட்டுப் போமாற்றிற்கும், குடாகாயவுவமை சூக்கும வுடம்பு விட்டுப்போ மாற்றிற்குமெனக்

கோடல் பொருத்த முடைமையின் அவ்வேறுபாடுணராது குடாகாய வுவமையுந் தூலவுடம்பு விட்டுப் போமாற்றிற்கே போலுமென மலை யற்கவென மேலதனை வலியுறுத்தவாறு காண்க. மேலைவெண் பாவில் 'கண்ட நனைவைக் கனவுணர்விற்ருன் மறந்து' என்றது அறிவு வேறுபடு முறைமைக்கு எடுத்துக் காட்டியதெனவும், ஈண்டு அக் கனவுமென்றது அதனையே உடல் வேறுபடு முறைமைக்கு எடுத்துக் காட்டியதெனவுந் தெரிந்து கொள்க.

## நான்காமதிகரணம்

*இனி நீக்கமின்றி நிற்குமன்றே யென்றது.*

மே—அங்ஙனம் புனருற்பவமாதற் கேதுவாய் இருவினைகளைச் செலுத்தி நிற்பதெனப் போந்த ஆணையெனப்படுஞ் சத்தியாவது முதல்வனின் வேறோ அன்றோ வென்னும் ஐயப்பாட்டின்கட் பொருட்குச் சத்தி வேறென்னு மீமாஞ்சகர் முதலியோர் மதமும், அன்றென்னும் நையாயிகர் முதலியோர் மதமும் பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இறுதிக் கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோடனுதலிற்று. முதல்வன் தனதாணையாகிய சிற் சத்தியோடு சமவேதமாய் நிற்பன்.

அந்நியயோக வியவச்சேதம் அயோக வியவச்சேதம் என்றற் றொடக்கத்து வடசொற்கள் பிறிதினியைபு நீக்குதல் இயைபின்மை நீக்குதல் என்றற்றொடக்கத்தனவாக மொழி பெயர்த்து வழங்கப்படு மாறுபோலச் சமவாயமென்னும் வடமொழி தமிழின்கண் நீக்க மின்றி நிற்றலென மொழி பெயர்த்து வழங்கப்படுமென்றுணர்க. வடமொழி இரண்டாஞ் சூத்திரத்திறுதியின் ஆணை முதல்வனோடு சமவேதமாய் நிற்குமென ஆணைமேல் வைத்தோதியதனை ஈண்டு முதல்வன்மேல் வைத்தோதினர். கண்ணழிப்புழி இருவினை முதல் வனாணையின் வருமெனக் கூறிப்போந்த ஆணை, ஈண்டுக் கூறாமையே இனிது விளங்குமென்னுங் கருத்தாற் சொற்பல்காமைப் பொருட்டு அதனை யொழித்தெடுத்துக் கொள்ளப்பட்டது. இப்பொருள் காண மாட்டாதார் சருவவியாபியாய் நிற்றலாலென்னும் ஏதுவின்பொருளை மேற்கோளுக்கும் பொருளாகக் கொண்டுரைப்ப. அது கூறியது கூற லாதலுமன்றி மொ[illegible] கேலாமையுமறிக.

துள்ளார்கள். இதுபோழ்து தமிழ் இளைஞர்க்கும் நல்லதொரு பணி செய்ய உன்னி இவர்கள் இந்நாடகத்தை நல்கியிருப்பது பெரிதும் போற்றத்தக்கதாம். இந்நூலில் அப்பர் பெருமான் சரிதையின் முக்கியப் பகுதிகள் யாவும் முன்னூலோடு சிறிதும் முரணுறா வகையில் அழகுற அமைந்துள்ளன. நாடகச் சுவை கருதிச் சேர்த்த சிற்சில பாத்திரங்களின் பேர்கள்தாமும் சிவமணமும் தமிழ் மணமும் சேர்ந்தனவாயுள்ளன. இவர்களின் செயல்கள் சரித உண்மைப் போக்கிற்குச் சற்றும் மாறுவிளைப்பனவல்ல. ஆனால் 'தேவாரத்தை எழுதிவைத்துப் படித்து மகிழும் ஆற்றல் அமைந்த விகடப்பர் ஏனோ கொச்சைத் தமிழிற் பேசுகின்றார்' என்று ஒரு சிலர் எண்ணுதல் கூடும். ஆசிரியர் அதற்குரிய காரணம் காட்டுகின்றார். திருநாவுக்கரசர் உறுதித் திருவாக்குக்களும் சேக்கிழார்பெருமான் செஞ்சொற்புனை மாலைகளும் இந்நூலிற் செறிந்திருப்பது தமிழ்ச்சுவை அறிவார்க்கு மிக்க இன்பம் தரும். இந்நாடகத்தை நடிப்போர் காண்போர் உள்ளத்தில் தேவாரத்தையும் பெரியபுராணத்தையும் ஓத வேண்டும் என்னும் வேட்கை எழும். தயாமூல தர்மமும், சுத்த சிவ சன்மார்க்கமும் உலகிற்குப் பெரிதும் வேண்டப்படும் இக்காலத்தில், இந்நூல் தமிழ் மாணவர்க்கும், அவர் வாயிலாகத் தமிழ் மக்கட்கும், அந்நன்மையைப் பெருக்குமொரு இனிய சாதனமாய் இலகும் என்று நம்புகிறேன்.

ச. சச்சிதாநந்தம் பிள்ளை.

கொங்குமலர் :—கோவைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு. ஆண்டுச் சந்தா ரூ 1½. கிடைக்குமிடம். "கொங்குமலர்" காரியாலயம், வைசியர்வீதி, கோயமுத்தூர். இம்மலரின் முதல் மூன்று இதழ்கள் வரப்பெற்றோம். பல சிறந்த ஆராய்ச்சிக்கட்டுரைகள் திகழ்கின்றன. திருவாளர்கள், C. M. இராமச்சந்திர செட்டியார், C. K. சுப்பிரமணிய முதலியார் முதலிய பேரறிஞர்கள் அரிய வியாசங்கள் எழுதி உதவுகின்றார்கள். கல்வெட்டுச் சான்றுகள், போட்டோ படங்கள் முதலியன இவ்விதழ்களின் சிறந்த பகுதிகளாகவுள்ளன. ஒவ்வொரு தமிழரும் இப்பத்திரிகையை ஆதரிக்கவேண்டுகிறோம்.

## சங்கப் புலவர் அகராதி

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு எனப்படும் சங்க நூல்களிற் காணப்படும் ஆசிரியர்கள் பெயர்களெல்லாம் அகர வரிசையில் தொகுக்கப்பட்ட இந்நூல், ஒவ்வொரு புலவரும் இயற்றிய பாடல்களும் இன்ன இன்ன என்ற குறிப்போடு பல பேரறிஞர்கள் உதவியைக் கொண்டு சமாஜப் பதிப்பாக வெளிவந்துள்ளது. தனிப்பிரதி விலை அணா 2½. தபாற்கூலி அணா 1. எட்டுப் பிரதிகள் விலை ரூபா ஒன்று; தபாற் கூலி வேறு. ஒவ்வொரு தமிழ் மாணவரிடமும் இவ்வகராதி இருத்தற் குரியது.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 7. No. 8.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# பெரிய புராணம்

## சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு

இப்பதிப்பில் பெரியபுராணத்தின் மூலம் செம்மையாகவும் திருத்தமாகவும் பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு செப்பஞ் செய்யப் பெற்று அச்சிடப்பட்டுள்ளது. முக்கியமான பகுதிகள் தடித்த எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளன. சேக்கிழார் வரலாறு, காலஆராய்ச்சி, நாயன்மார் அட்டவணை, அரும்பொருள் அகராதி, சேக்கிழார் புராணம், திருமுறைகண்ட புராணம், திருத்தொண்டர் திருவந்தாதி, புராணசாரம், இதுவரை எந்தப் பதிப்பிலும் வெளிவராத பாட்டு முதற்குறிப்பகராதி முதலியன இப்பதிப்பில் விளங்குகின்றன.

தனிப்பிரதி விலை ரூ. 1— 6—0

ரிஜிஸ்தர் தபாற்கூலி 0—10—0

ஆறுபிரதிகள் விலை ரூ. 7— 8—0 தபாற்கூலி வேறு.

**பன்னிரு திருமுறைகள்:**—சமாஜப் பதிப்பு. ரயில்வே பார்சல் மூலம்அனுப்பத் தபாற்கூலி விலையுட்பட ரூ 6/-(ரயில்சார்ஜ்மட்டும் வாங்குவோர் செலுத்தவேண்டும்.)

---

## பதினொராந் திருமுறை

பன்னிரு ஆசிரியர் இயற்றிய நாற்பது திவ்விய பிரபந்தங்கள் அடங்கியது. நல்ல கிளேஸ் காகிதத்தில் அழகிய பைகா டைப்பில் அச்சிடப்பட்டது. பதங்கள் பிரித்து அர்த்தம் தானே விளங்கும்படியான அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு.

தனிப் பிரதி விலை அணு பதினொன்று ;
ரிஜிஸ்தர் தபாற்கூலி அணு ஆறு.

எட்டுப் பிரதிகள் விலை ரூபா ஐந்து ;
ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூபா ஒன்று அணு பத்து.

---

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.